Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Admission open
No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
BIT-Degree University of Colombo 20000 Rs only 1st Year
CIMA-UK 14000 Rs. only founation level Course fee
Computer Engineering - USA
Government Scholorship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/1328) MCS Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 05 ஞாயிற்றுக்கிழமை (18.03.2012) பக்கங்கள் 16 ஓசை - 169



ஒருமணி நேரம் விளக்கை அணைத்தார்

13



புலிகளுக்கு தெற்கில் காணி

09



ஏகப் பிரதிநிதிகள்?

04



இன்னும் ஏன் இவை?

03

# ஆதரவு கோரும் முயற்சியை தீவிரப்படுத்தியது அமெரிக்கா

## முறியடிப்பதற்கு இலங்கையும் மும்முரம்

(ஜெனிவா)

இலங்கைக்கு எதிராக மனித உரிமை பேரவையில் சமர்ப்பித்துள்ள பிரேரணைக்கு ஆதரவு தேடும் நடவடிக்கையில் அமெரிக்கா முழு வீச்சுடன் ஈடுபட்டு வரும் அதேவேளை அந்தப் பிரேரணையை முறியடிப்பதற்குத் தேவையான முயற்சிகளில் இலங்கை அரசாங்கமும் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக ஜெனிவா தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனிவாக்கூட்டத் தொடரின் நிறைவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானம் விவாதத்துக்கு எடுக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் வொஷிங்டனில் இருந்து மேலதிகமாக இராஜாங்கத் திணைக்களத்தின் 100 அதிகாரிகளை ஜெனிவாவுக்கு அனுப்பி வைத்துள்ள அமெரிக்கா, இலங்கைக்கு எதிரான பரப்புரைகளையும் தீவிரப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் இந்நடவடிக்கையானது இலங்கைக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவு கோரி அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழுக்கள் ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், அமெரிக்காவின் தீவிர பரப்புரை நடவடிக்கைகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு ஜெனிவாவில் உள்ள இலங்கை தூதரகத்தை வெளிவிவகார அமைச்சு எச்சரித்துள்ளது.

ஜெனிவாவில் கடந்த மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமான ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடர் அடுத்த வாரத்துடன் நிறைவு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆயுதங்கள் மீட்பு

(வவுனியா)

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுகளும், இராணுவ உபகரணங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வவுனியா பிராந்திய குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போதே இந்த உபகரணங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதில் ஆர்.பீ.ஜீ. குண்டுகள், விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் துப்பாக்கிகளும் அடங்கியுள்ளன.

அடையாளம் காணப்படாத ஆயுதங்களின் பாகங்களும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன. பதவியா மற்றும் பாலம்பிட்டி ஆகிய பிரதேசங்களின் வரைபடங்களும் இந்த தேடுதலின் போது கண்டெடுக்கப்பட்டுள்ளன. (125)

## மகஜன சம்பத சீட்டிழுப்பில் யாழ்.வாசிக்கு 3 கோடி பரிசு

(யாழ்ப்பாணம்)

மகஜன சம்பத சீட்டிழுப்பில் யாழ். வாசி ஒருவருக்கு நேற்று 3 கோடியே 82 இலட்சம் ரூபா பரிசுத்தொகை விழுந்திருப்பதாக தேசிய லொத்தர் சபையை மேற்கோள் காட்டி அதன் யாழ். முகவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்பவர் பற்றிய தகவல்கள் எதனையும் அவர்கள் வெளியிடவில்லை.

யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்பட்ட சீட்டு ஒன்றிற்கே இப்பரிசுத்தொகை விழுந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் குறித்த தகவல் சீட்டு விற்பனை முகவர் நிலையங்களில் நேற்று தொங்கவிடப்பட்டிருந்தது.

இத்தகவல் யாழ். நகரிலும் புறநகர் பகுதிகளிலும் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. குறித்த சீட்டிழுப்பு கிழமைக்கு ஒரு தடவை தேசிய லொத்தர் சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (பா)

## ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குறித்து அரசின் நிலைப்பாடு வெளிவரவேண்டும்


### கோருகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ கோரியுள்ளார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் ஆளும் கட்சி அமைச்சர்களுக்கு இடையில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பரிந்துரைகளை எவ்வாறு அமுல்படுத்துவது என்பது தொடர்பில் அமைச்சர்களுக்கு இடையில் முரண்பாடு நிலவி வருகின்றது.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அரசாங்கப் பிரதிநிதிகள் அளிக்கும் உறுதி மொழிகளுக்கும், உள்நாட்டில் அரசாங்கத் தரப்பினர் வெளியிடும் கருத்துக்களுக்கும் வேறுபாடு காணப்படுகிறது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பத்தாயிரம் பேர் கொல்லப்பட்டதாக அமைச்சர் நவீன் திசாநாயக்க கருத்து வெளியிட்டுள்ளார் எனினும், அவர் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க அழைக்கப்படவில்லை.

விடுதலைப் புலிகளினால் (15 ஆம் பக்கம் பார்க்க)



## ரணிலின் யாழ். விருந்தில் சரா எம்.பி.யும் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன்தினம் இரவு யாழ். நகரிலுள்ள விடுதியொன்றில் நடத்திய விருந்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனும் கலந்துகொண்டுள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## பரிந்துரைகளை அமுலாக்கத் தவறின் ஜெனிவாவிற்கு அறிக்கை சமர்ப்பிப்பு

### எச்சரிக்கிறது கூட்டமைப்பு

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு அமுல்படுத்த தவறினால் நாட்டின் இன்றைய நிலைவரம் குறித்து பூரணமான விளக்கத்தை தாம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமல் விட்டதனால் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தொடர்பாக ஆதாரங்களுடன் தாம் அறிக்கையை

(15 ஆம் பக்கம் பார்க்க)

## மர்மப் பொருள் வெடித்து ஆறு சிறுவர்கள் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி செல்வாநகர் யூதா கோயிலடி பகுதியில் பாவனை இல்லாத காணியில் விளையாடிக் கொண்டிருந்த 6 சிறுவர்கள் மர்மப் பொருள் வெடித்து காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுப் பகல் 1.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இக்காணியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் சிறிய பொருள் ஒன்றை தட்டி விளையாடியபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

செல்வாநகரைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் தர்ஷன் (வயது 12), ஜீவாகுமாரன் யசோதரன்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு உயிரூட்ட முனைந்த குழு நாட்டிற்கு எதிராக செயற்படுகிறது

### பாதுகாப்புச் செயலர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கைக்கு எதிராக செயற்படும் குழுவினர், இறுதிகட்ட யுத்தத்தில் விடுதலைப் புலிகளுக்கு உயிரூட்ட முனைந்தவர்களென பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சனல் - 4 காணொளியில் தெரிவிக்கப்பட்டமைக்கு அமைய, இலங்கை அரசாங்கத்தினால் பொதுமக்களை ஒன்றுசேர்க்க, ஒருபோதும் யுத்த சூனிய வலயம் ஒன்று அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்தில் கிளிநொச்சியை மீட்பதற்கு இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்தனர். (15 ஆம் பக்கம் பார்க்க)

# ஓய்வூதியர் நலன் பேணும் சங்கத்தில் மிகக் குறைந்தளவானோரே இணைவு

## கிளிநொச்சி மாவட்ட கணக்காளர் கவலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாக 740 அரச ஓய்வூதியர்கள் ஓய்வூதியம் பெறுகின்றனர். ஆனால் மாவட்ட அரச சேவை ஓய்வூதியர் நலன் பேணும் சங்கத்தில் மிகக்குறைவானோரே அங்கத்தவர்களாக இணைந்துள்ளனர். இது மிகவும் கவலைக்குரியது என நேற்றுக்காலை நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட அரச ஓய்வூதியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி மாவட்டச் செயலகக் கணக்காளர் ப.ஜெயராசா குறிப் பிட்டார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நேற்றுக்காலை நிதியத் தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது, கடந்த காலப் போர் நடவடிக்கையினால் எமது மாவட்ட ஓய்வூதியர்களின் கோவைகள் அனைத்தும் அழிந்து விட்டன. முடியுமானவரை உள்ள ஆவணங்களோடு புதிய கோவைகளைத் தயாரிக்கும் நிலையில் உள்ளோம். நீங்கள் உங்கள் கோவைகளைப் பூரணப்படுத்த உங்களிடம் உள்ள ஆவணங்களை எமக்குத் தந்துதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

எதிர்வரும், மே மாதத்தில் இருந்து உங்களது பிரதேச செயலகங்களே இலத்திரனியல் முறையில் ஓய்வூதிய வேலைகளைச் செய்யவுள்ளது என்றார்.

இவ்வருடத்திற்கான புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

இதில் தலைவராக அ.கனகரத்தினம், துணைத் தலைவராக நீ.குலேந்திரதாசன், செயலாளராக திருமதி என்.யோகராணி, துணைச் செயலாளராக சி.பெருமாள், பொருளாளராக மு.சிவஞானசுந்தரமூர்த்தி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து பிரதேச செயலக ரீதியாகப் பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

கரைச்சிப் பிரதேச செயலக ரீதியில் - பொ.கணபதிப்பிள்ளை, க.மகாலிங்கம், பி.சந்திரராசா, சி. கந்தையா ஆகியோரும்,

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக ரீதியில் - திருமதி அ. பெனடிற் அம்மா, க.குணசீலன் ஆகியோரும்,

பூநகரி பிரதேச செயலக ரீதியில் - பொன்.தில்லைநாதன், சி. வயிரவநாதன் ஆகியோரும்,

கண்டாவளை பிரதேச செயலக ரீதியில் - சி.இராமநாதன், வே.மகாலிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய செயலாளர் திருமதி என்.யோகராணியின் நன்றியுரையுடன் நிகழ்வு முடிவுற்றது. (112)

## பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் பாவனைக்கு எதிராக மக்களை அணிதிரட்டுவதற்காக பயிற்றுவிப்பாளர்களை உருவாக்கும் பயிற்சி நெறி சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிராந்திய பயிற்சி நிலையத்தில் நேற்று ஆரம்பித்து இன்றும் நடைபெறுகின்றது.

தெரிவு செய்யப்பட்ட 15 பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், 10 ஆசிரியர்களுக்கு முதற்கட்டப் பயிற்சி வழங்கப்படுகின்றது. இப்பயிற்சியினைப் பெற்றுக்கொண்டவர்கள் தொடர்ந்து ஏனையோருக்குப் பயிற்சிகளை வழங்கவுள்ளனர். இப்பயிற்சியினை S.L.Fongoda என்ற அரச சார்பற்ற நிறுவனம் வழங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# பெறுபேற்றை உயர்த்த விசேட செயற்திட்டங்கள்

நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தரப்பரீட்சை மற்றும் ஒன்பதாம் தரத்திற்கான மாகாண மட்டப் பொதுப்பரீட்சை என்பனவற்றில் மாணவரின் பெறுபேற்றுவீதத்தை உயர்த்தும் வகையில் யாழ்.வலய விஞ்ஞான கல்விப் பிரிவினரால் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய ஒவ்வொரு தவணையிலும் மதிப்பீட்டுப் பரீட்சைகளை நடத்தி அவற்றில் பொது மதிப்பீட்டுக் குழு மூலம் மதிப்பீடு செய்து புள்ளிப் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதன் மூலம் குறைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்திப்பதற்கான மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், தரம்-9, தரம்-11 ஆகிய வகுப்புக்களுக்கென விசேட ஆசிரிய ஆளணியினரால் விஞ்ஞானப் பிரிவின் மேற்பார்வையின் கீழ் தயாரிக்கப்பட்ட முதலாவது வினாத்தாளிற்கான பரீட்சைகள் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)



வேலணை பிரதேசத்துக்கு உட்பட்ட வேலணை துறையு,ரில் அமைக்கப்பட்டிருந்த கடற்படை முகாமின் ஒரு பகுதி கடற் படையினரால் மக்கள் பாவனைக்காக நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் விடுவிக்கப்பட்ட பகுதியினை வேலணை பிரதேசசபை தவிசாளர், துறையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பாலச்சந்திரன் மற்றும் வேலணை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் தலைவர் ரங்கநாயகம் ஆகியோர் பார்வையிடுவதைக் காணலாம். (85)

# வேலணை நூலகம் புனரமைக்க ஏற்பாடு

(வேலணை)

வேலணை பிரதேசசபையினது பொது நூல் நிலையக் கட்டடம் புனரமைத்து திருத்தி அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி பொது நூல் நிலையமானது பல வருடங்களாக திருத்தி அமைக்கப்படாமல் இருந்தாகவும், இந்த நூல் நிலையக் கட்டடத்தை புதிதாக திருத்தி நவீன முறையிலான கட்டடமாக அமைத்துக் கொள்வதுடன், சிறுவர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலதரப்பட்ட வாசகர்களுக்கு ஏற்ற முறையில் இந்தக் கட்டடம் திருத்தி அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# கணினிக் கடையில் திருட்டு மடக்கிப் பிடித்தனர் ஊழியர்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரான்லி வீதிப் பகுதியில் பிரபல்யமான கணினி விற்பனை நிலையத்தில் ஒரு இலட்சம் ரூபா பணம் திருடிய நபர் ஊழியர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு, ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த மேற்படி நபர் நேற்றுக்காலை குறித்த விற்பனை நிலையத்திற்குச் சென்று கணினி உதிரிப்பாகம் ஒன்றை வாங்கியுள்ளார்.

4 ஆயிரம் ரூபாவுக்குப் பொருளை வாங்கிவிட்டு விற்பனை நிலையத்தில் உட்புற மேசையில் இருந்த ஒரு இலட்சம் ரூபா பணத்தினை எடுத்து தனது பொக்கட்டினுள் வைத்துக் கொண்டு விற்பனை நிலையத்தினை விட்டு வெளியே சென்றுள்ளார். இதனை அவதானித்த கணக்காளரான பெண் ஊழியர் உடனடியாக சக ஊழியரிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

உடனடியாகச் செயற்பட்ட நிறுவன ஊழியர் குறித்த இளைஞரைத் துரத்திச் சென்று ஸ்ரான்லி வீதி, இலங்கை வங்கிக்கு அருகில் வைத்து மடக்கிப் பிடித்துள்ளார்.

இவ்வாறு பிடிக்கப்பட்டவேளை குறித்த இளைஞர் அருகில் இருந்த விற்பனை நிலையத்தில் இருந்த கத்தியால் தன்னை வெட்டித் தற்கொலை செய்துகொள்ள முயன்றவேளை, அங்கு நின்ற இளைஞர்களால் தற்கொலை முயற்சி முறியடிக்கப்பட்டதுடன், அவ் இளைஞன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அந்த இடத்தில் வைத்து இளைஞனைச் சோதனையிட்ட போது, திருடப்பட்ட ஒரு இலட்சம் ரூபா பணத்துடன் வெவ்வேறு கையொப்ப மிட்ட கடன் அட்டைகளும், 10 ஆயிரம் ரூபா பணமும் அவரது பணப்பையில் இருந்ததாகவும் திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற கடை ஊழியர்கள் தெரிவித்தனர்.

திருட்டு முயற்சியில் ஈடுபட்ட இளைஞனின் சைக்கிள் கடையில் இருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (எஸ்)

# மகாபாரதம் சொற்பொழிவு

(வடமராட்சி)

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நாளை ஆலயச் சுற்று பரிவார மூர்த்தி பூசைகள் நிறைவு பெற்றதும் பண்டிதர் பொன்.சுகந்தனின் தலைமையில் மகாபாரதம் என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு இடம்பெறும் எனவும், அதனைத் தொடர்ந்து மகேஸ்வரர் பூசையும் நடை பெறும் என ஆலய மடாதிபதி வை.ஆனந்தராசா தெரிவித்துள்ளார். (116)

# நுகர்வோரைப் பாதுகாக்க வியாபாரிகள் மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில், காலவதியான பொருட்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக விற்பனை செய்த 13 வர்த்தகர்களுக்கு 59 ஆயிரத்து 500 ரூபா அபராதம் யாழ். நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனையின் போது குறித்த வர்த்தகர்கள் பிடிக்கப்பட்டு கடந்த புதன்கிழமை யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராசா, ஒரு கிலோ 15 ரூபா விற்கவேண்டிய சீமெந்தினை ஒரு கிலோ 20 ரூபாவிற்கு விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு 5 ஆயிரம் ரூபா தண்டமும், காலாவதியான ஜாம் விற்பனை செய்த வர்த்தகர் களுக்கு 2 ஆயிரம் ரூபா தண்டமும், 32 ரூபா விற்கவேண்டிய குளிர்பானத்தினை 210 ரூபாவுக்கு விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு 6 ஆயிரம் ரூபா தண்டமும், 32 ரூபா விற்க வேண்டிய குளிர்பானத்தினை 35 ரூபாவுக்கு விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு 4 ஆயிரம் ரூபா தண்டமும், 35 ரூபா விற்பனை செய்ய வேண்டிய பால்மா பைக்கற்றை 40 ரூபாவுக்கு விற்பனை செய்த வர்த்தகருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டமும், 25 ரூபா விற்பனை செய்ய வேண்டிய 270 மில்லிலீற்றர் குளிர்பானத்தினை 30 ரூபாவுக்கு விற்பனை செய்த வர்த்தகருக்கு 4 ஆயிரம் ரூபா தண்டமும், காலாவதியான குளிர்பானத்தினை விற்பனை செய்த வர்த்தகருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டமும், 32 ரூபா விற்பனை செய்ய வேண்டிய 400 மில்லிலீற்றர் குளிர்பானத்தினை 35 ரூபா விற்பனை செய்த வர்த்தகருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டமும், 35 ரூபா விற்க வேண்டிய குளிர்பானத்தினை 40 ரூபாவுக்கு விற்பனை செய்த வர்த்தகருக்கு 5 ஆயிரம் ரூபாவும் தண்டமும், ஒரு கிலோ குத்தரிசியை 70 ரூபாவுக்கு விற்பனை செய்த வர்த்தகருக்கு 3 ஆயிரத்து 500 ரூபா தண்டமும் விதித்துத் தீர்ப்பளித்தார்.


பாராட்டி வாழ்த்துகிறோம்





எமது ஆலயத்தின் வளர்ச்சிக்காக ஒரு இலட்சம் ரூபா நிதியினை வழங்கிய கௌரவ மாண்புமிகு அமைச்சர்

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)

அவர்களுக்கும் **கந்தசாமி கமலேந்திரன்** (ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர்) அவர்களுக்கும் ஈ.பி.டி.பி. வலி.வடக்கு அமைப்பாளரும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான **இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் (அன்புத்தோழர்)** அவர்களுக்கும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் **செல்லப்பா திருஞானம்** அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்த்துவோர் :
ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையினர்.

கோவில் வீதி,
மல்லாகம். (R/122)



## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1326)

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தரு கிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1327)

காட்டில் சென்று ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்வதில் பெறும பலன்களை அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரை நினைப்பதிலும் அவரை வழிபடுவதிலுமே பெற்றுவிடலாம்.

- அருட்பிரகாச வள்ளல்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## வெறுப்பு அரசியலிலிருந்து விலகுதல்!

ஊழல் என்பது பணமோசடி மட்டுமல்ல கருத்து ரீதியான மோசடி, மக்களை ஏமாற்றுதல், பிழையான வழிகாட்டுதலைச் செய்தல், அரசியல் ரீதியான குற்றம் போன்றவையும் ஊழல்தான் என்பது நமது இன்றைய புரிதல். ஊழலைப் புரிந்துகொள்ளுதல் என்பது இன்றைய அரசியலைப் புரிந்துகொள்ளுதல்தான் என்பதிலும் சந்தேகமில்லை.

சமூகவியலிலும் பொதுநிர்வாகத் துறையிலும் தற்கால ஆய்வுகளைத் தொடக்கி வைத்தவர் எனக் கருதப்படும் மக்ஸ் வெபர் என்ற மேதை அரசியல் முதலாளித்துவம் என்ற ஒரு சொல்லைத் தன்னுடைய புத்தகத்திலே கையாண்டிருந்தார். மூலதனம் எழுதிய கார்ல் மார்க்ஸைப் போலவே இவரும் ஒரு ஜெர்மானியர். மார்க்ஸ் காலத்திற்குச் சற்றுப் பிந்தியவர்.

இவரது அரசியல் முதலாளித்துவம் என்ற கருத்து அவர் காலத்திற்குப் பின்பு உலகில் வெகு பிரபலமடைய ஆரம்பித்தது. மக்ஸ் வெபர் இந்த அரசியல் முதலாளித்துவம் பற்றி ஒரு சிறு வரையறையாகத்தான் தந்திருந்தார். எல்லையில்லா அளவுக்கு அரசாங்கப் பதவியின் அதிகாரங்களைப் பயன்படுத்தி எந்தத் தொழிலும் செய்யாமல் பணம் சம்பாதிப்பது, அதைத் தொடர்ந்து அரசியலில் குற்றம்புரிவது, மக்களைக் கலக நிலையில் வைத்திருப்பது, இதைப் பயன்படுத்தி பதவிகளைப் பிடிப்பது, அரசியலிலும் ஆட்சியிலும் நிர்வாகத்திலும் இவைகளை ஒரு மாதிரி முறைமையாக உருவாக்கி விடுவது என்று இதற்கு அவர் விளக்கமளித்துள்ளார்.

மக்ஸ் வெபரின் விளக்கத்தை மூலக் கருத்தாக வைத்துக் கொண்டு கனேவ் என்ற சமூகவியல் ஆராய்ச்சியாளர், எப்படி கம்யூனிசத்தை கிழக்கு ஐரோப்பியா, ரஷ்யா போன்ற நாடுகளில் ஊழல் மூலம் வீழ்த்தினர் என்பதை ஆராய்ச்சி செய்துள்ளார். இதேபோலத்தான் உலகமயமான பொருளாதாரமும் எல்லையில்லா ஊழலால் வீழப் போவது வெகுதூரத்தில் இல்லை என்கிறார்கள்.

இங்கும் இதேபோன்ற ஓர் ஆராய்ச்சியை நடத்தினால், எப்படி ஒன்றுமில்லாதவர்கள் அரசியலுக்குள் புகுந்து, மிகப்பெரிய அளவுக்குப் பணம் சம்பாதித்தனர் என்பதையும், மக்களது வாழ்நிலையை உயரவிடாமல் வைத்திருப்பதன் மூலம் தங்கள் அரசியல் இருப்பை நிலைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் உலகுக்கு அம்பலப்படுத்திவிடலாம்.

அரசியலிலும், பதவியிலும் தங்களைத் தக்க வைக்க எப்படிப்பட்ட கலகங்களையும், ஆவேசங்களையும், சாத்தியமற்ற கோரிக்கைகளையும் ஏமாற்றாகப் புகுத்தும் ஊழல் மூலம் புதியதொரு அரசியலை உருவாக்கினர் என்பதையும் ஆராய வேண்டும்.

இதற்கு அவர்களுக்குக் கிடைத்த காரணிகள் இரண்டு. ஒன்று, மக்களின் அறியாமை. இரண்டு, ஊடகங்களின் வலிமை. அரசியல், சமூக பொருளாதார மாற்றத்துக்காக புதிய கருத்துகளை மக்கள் மத்தியில் எடுத்துச்செல்லும் மத்தியதர வர்க்கத்தையும் புத்திஜீவிகளையும்கூட பழம்பெருமித உணர்வுகளால் தளைப்படுத்தப்பட்ட உணர்ச்சிகர ஆவேசத்திற்கு அடிமையாக்கி, அவர்கள் மூலமும் தங்களது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொண்டுள்ளனர்.

பெருமளவு மக்களின் வாழும் விருப்பத்துடன் – ஏக்கத்துடன் அரசியல் விளையாட்டு நடத்தி வருகின்றனர். அப்பாவி மக்களது அறியாமையையும் ஏழ்மையையும் தங்களது அரசியல் பிழைப்புக்கான கோஷங்களாக மாற்றி வருகின்றனர்.

பொய்ப் பிரசாரத்துக்காகவும், அரசியல் வணிகத்துக்காகவும் உருவாக்கப்பட்ட ஊடகங்கள் மக்களை வாழும் வழிக்கு நகர விடாமல் வைத்திருக்கின்றன. மற்றவர்களை விட மேம்பட்ட இனப்பெருமிதத்தை உருவகப்படுத்தி, உச்சத்துக்குக் கொண்டு சென்று மக்களை ஒரு மாயையில் சிக்க வைத்து, வணிகப் பிழைப்பை நடத்தி வருகின்றனர்.

மக்கள் உணர்ச்சிகளைத் திருடி அவர்களது வாழ்வைக் கொள்ளையடிக்கும் அரசியலிலிருந்து, அவர்களை வாழ வைக்கும் வழிக்குச் செல்லும் நடைமுறைச் சாத்திய அரசியலுக்கு வரவேண்டும். மாயை அரசியலிலிருந்து மக்கள் அரசியலுக்கு வரவேண்டும். கலக அரசியலிலிருந்து அமைதி அரசியலுக்கு வரவேண்டும். வீரவசன வெறுப்பு அரசியலிலிருந்து பக்குவமாக மக்களைத் தப்புவிக்கும் அரசியலுக்கு வரவேண்டும்.

எனவே, நம் அரசியல் பிரதிநிதிகள் அதே பழைய மிரட்டல் அரசியலைக் கைவிட்டு, புதிய தடத்தில் கால்பதிக்க வேண்டியதே மக்களிடம் அக்கறை கொண்டதன் அடையாளமாக அமையும். அரசியல் முதலாளித்துவம் என்பதை இனிமேலும் நம் அரசியலில் ஆதிக்கம் செய்ய விடலாகாது.

வீழ்ந்து கொண்டிருக்கும் பாதையிலிருந்து விலகி விவேகமுடன் புது வழிகாண வேண்டும்.

- ஆசிரியர்

# ஜெனிவாவில் சாதகமான சூழல் ஏற்படுவதற்கு திருப்திகரமான இந்திய நிலைப்பாடு வேண்டும்

## -அமைச்சர் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

சனல் - 4 தொலைக்காட்சி வெளியிட்டிருக்கும் புதிய காணொளி நல்லிணக்க ஆணைக்குழு நாட்டில் பெற்றுக்கொடுத்த சாதகமான தன்மைக்கு சவாலை ஏற்படுத்தியுள்ளது எனவும் ஜெனிவாவில் இலங்கைக்கு சாதகமான சூழல் ஏற்பட வேண்டுமாயின் இந்தியாவின் நிலைப்பாட்டில் திருப்திகரமான வெளிப்பாடு காணப்பட வேண்டும் என அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்த பிரேரணை மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதில் எத்தகைய முடிவு ஏற்படும் என்று தற போது கூற முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது. ஏனெனில் நாளுக்கு நாள் புதிய விடயங்கள் இலங்கைக்கு சவாலாக அமைந்து வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இலங்கைக்கு எதிராக சர்வதேசம் முன்வைத்த மனித உரிமை மீறல் மற்றும் போர்க் குற்றங்களுக்கு பதில் கூறுவதாக அமைந்தது.

ஜெனிவாவில் தற்பொழுது நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரிலும் இலங்கைக்கு சாதகமான நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் காணப்பட்டன. ஆனால் சனல் - 4 தொலைக்காட்சி அண்மையில் வெளியிட்ட இலங்கையின் உள்நாட்டு யுத்தம் தொடர்பான புதிய காணொளியானது இதுவரை காலம் நல்லிணக்க ஆணைக்குழு பெற்றுக்கொடுத்த நன்மைகளை சீரழித்துள்ளது. பி.பி.சி. மற்றும் அல்ஜசீரா போன்ற சர்வதேச ஊடகங்களிலும் மேற்படி காணொளி ஒளிபரப்பப்பட்டுள்ளது. இது மேலும் சிக்கல் நிலையினையே ஏற்படுத்தியுள்ளது.

எவ்வாறாயினும் இலங்கையை பொறுத்த வரையில் இந்தியாவின் நிலைப்பாடு அத்தியாவசியமானதொன்றாகும். பொதுவான மனித உரிமை தீர்மானங்களுக்கு ஆதரவளித்தாலும் குறிப்பிட்ட நாடொன்றை மையப்படுத்தி மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு இந்தியா ஆதரவளிக்காது என்று உறுதிபடத் தெரிவிக்கப்பட்டுள்ளமை வரவேற்கப்பட வேண்டும் என திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

## சனல்-4 ஆவணப்படம் ஜெனிவாவில் ஒளிபரப்பப்படும்

பிரித்தானியாவின் சனல் - 4 ஊடகத்தின் இரண்டாவது ஆவணப்படம் ஜெனிவா மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் ஒளிபரப்புச் செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் திங்கட்கிழமை குறித்த ஆவணப் படம் ஒளிபரப்புச் செய்யப்படக்கூடும் என இராஜ தந்திரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றும் முயற்சிகள் இடம்பெற்றுவரும் நிலையில் குறித்த ஆவணப்படம் வெளியிடப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது. சனல் - 4 ஆவணப்பட ஊடகவியலாளர்கள் ஜெனிவாவிற்கு விஜயம் செய்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

## நூல் வெளியீடும், பரிசளிப்பும்

(இணுவில்)

இணுவில் சைவத்திருநெறிக்கழக ஆதரவில் சிவகாமி அறநெறிப்பாடசாலையின் 15ஆம் ஆண்டு விழாவும், "யாழ்.மண்ணில் சைவமும் தமிழும் வளர்த்த சான்றோர்கள்" நூல் வெளியீடும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இணுவில் சிவகாமி அம்பாள் அன்னதான மண்டபத்தில் இடம்பெறும் இந் நிகழ்விற்கு இணுவில் சைவத்திருநெறிக்கழகத் தலைவர் கெ.தவராசா தலைமை தாங்குவார்.

சிவபூமி அறக்கட்ளைத்தலைவரும் தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய அறங்காவற் குழுத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

ஆசியுரைகளை சிவகாமி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சாம்பசிவசோமசபேசக்குருக்கள், ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி பணிப்பாளர் செ.குபேரநாதன் ஆகியோர் வழங்குவர். இணுவில் சைவதிருநெறிக்கழகக் காப்பாளர் பெ.கனகசபாபதி தொடக்கவுரையை நிகழ்த்துவார்.

நூல் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும், திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் ந.விஜயசுந்தரம் நூல் மதிப்பீட்டுரையை நிகழ்த்துவார். முதற்பிரதியை கொழும்பு ஐடியல் அக்கடமி இயக்குநர் லயன் செ.மனோகரன் பெற்றுக் கொள்வார்.

இணுவில் இளந்தொண்டர்சபை அறநெறிப்பாடசாலை மாணவனான செல்வன் ப.கௌரீசன் குழுவினரின் வில்லிசை, திருமுறை ஓதுதல் மற்றும் யாழ்.பல்கலைக்கழக நுண்கலை மாணவி சிந்து சிவபாலனின் பேச்சு ஆகிய நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (44)

## தேசிய நூதன சாலையில் திருட்டு திருடர்களைத் தேடி வலை வீச்சு

கொழும்பு - கறுவாத்தோட்டத்திலுள்ள தேசிய நூதனசாலையில் நேற்று முன்தினம் இரவு திருடர்கள் குழுவொன்று புகுந்து, புராதன வாள்கள் மற்றும் நாணயங்களை திருடிச்சென்றுள்ளனர்.

7 புராதன வாள்களும் சில நாணயங்களும் காணாமல் போயுள்ளமை தெரியவந்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார். குற்றவாளிகளைக் கண்டறிவதில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை எனவும், குற்றப் புலனாய்வுப் பணியகமும் கறுவாத்தோட்ட பொலிஸாரும் விசாரணைகளை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## திருமலைக்கடலில் படகு மூழ்கியது; ஒன்பது மீனவர்கள் உயிர் தப்பினர்

கிண்ணியாவில் ஆழ்கடலில் மீன் பிடித்து கரை திரும்பிக்கொண்டிருந்த மோட்டார் இயந்திரப் படகொன்று கடலில் கவிழ்ந்தபோது தெய்வாதீனமாக 9 மீனவர்கள் ஏனைய மீனவர்களால் காப்பற்றப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை கோணஸ்வரர் பகுதியில் உள்ள பாதாள மலைப் பகுதியில் இச்சம்பவம் இடம் ·பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இம் மீனவர்கள் சுமார் 10 ஆயிரம் கிலோவுக்கும் மேற்பட்ட மீனுடன் கரையை நோக்கி படகைச் செலுத்திக்கொண்டிருந்த போது இப் படகு கட்டுப்பாட்டை இழந்து கடலுக்குள் அமிழ்ந்துள்ளது. இம் மீனவர்கள் ஏனைய மீனவர்களின் வள்ளங்கள் மூலம் காப்பாற்றப்பட்டு கரை சேர்க்கப்பட்டனர்.

# இலங்கைக்கு இன்னும் ஏன் யுத்த ஆயுதங்கள்; பிரிட்டிஷ் அரசிடம் முன்வைக்கப்படும் கேள்வி

(கொழும்பு)

இலங்கைக்கான ஆயுதங்களை பிரித்தானியா தொடர்ந்தும் விற்பனை செய்து வருவதற்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதற்காக தொடர்ந்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது ஏன் என்று விளக்கமளிக்குமாறு, பிரித்தானிய அரசிடம் ஆயுத விற்பனைக்கு எதிரான சர்வதேச பரப்புரை அமைப்பு கோரியுள்ளது.

புலிகளுக்கு எதிரான போர் 2009 மே மாதம் முடிவுக்கு வந்த பின்னர் பிரித்தானியா, 3 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ் பெறுமதியான இராணுவ மற்றும் இருபயன்பாட்டு கருவிகளை இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கியுள்ளதாக இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பிரித்தானிய அனுமதி பெற்ற ஆயுதங்களை, இலங்கை அரசாங்கம் புலிகளுடன் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் பயன்படுத்தவில்லை என்று உத்தரவாதம் அளிக்க முடியாது என்று பிரித்தானிய நாடாளுமன்றக் குழுநிலைக் கூட்டத்தில், ஆயுத ஏற்றுமதி கட்டுப்பாட்டகம் தெரிவித்துள்ளது.

பிந்திய தகவல்களின்படி, 2011 ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில், பிரித்தானியா 1.5 மில்லியன் பவுண்ட்ஸ் பெறுமதியான ஆயுதங்கள் ஏற்றுமதிக்கு அனுமதியளித்துள்ளது. இவற்றில் 1.3 மில்லியன் பவுண்ஸ் பெறுமதியான கருவிகள் இலங்கை இராணுவத்துக்குரியவையாகும்.

இவற்றில் கவச வாகனங்கள், குண்டுதுளைக்காத உடற் கவசங்கள், 'பொறியில் சிக்க வைக்கும் எதிர் நடவடிக்கைக் கருவிகள் மற்றும் கூறுகள்' என்ற தலைப்பின் கீழ் வரும் கைக்குண்டுகள், குண்டுகள், ஏவுகணைகள் என்பன அடங்கியுள்ளன.

இந்தநிலையில் பிரித்தானிய அரசு தொடர்ந்தும் இலங்கைக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதியை வழங்கியுள்ளது ஏன் என்று நாம் கேட்க வேண்டியுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ்ப் பிரதேச அபிவிருத்தியில் அக்கறை இல்லாதவர்கள் ஏகப் பிரதிநிதிகள் ஆகமுடியாது

## ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களது துன்ப துயரங்களில் பங்குகொண்டு தமிழ்த் தேசத்தின் அபிவிருத்திக்காக எதனையுமே செய்ய முனையாதவர்கள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக முடியாது என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

இணுவில் கிழக்கு கலாஜோதி சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு விழாவும், கலை நிகழ்வுகளும் சனசமூக நிலையத் தலைவர் தங்கராசா தலைமையில் நடைபெற்ற போது முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் தமது உரிமையைப் வென்றெடுப்பதற்காக அகிம்சை வழியிலான போராட்டத்தை முன்னெடுத்தனர். அவ் அகிம்சை வழிப்போராட்டம் அப்போது ஆட்சியில் இருந்த தலைமைகளின் கொடுங்கரம் கொண்டு அடக்கப்பட்டதன் விளைவாக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தனர். அது தீர்க்க சிந்தனையற்ற தவறான வழி நடத்தலால் தோல்வியைத் தழுவியுள்ளது.

தற்போது தமிழ் மக்கள் தங்கள் உரிமையை வென்றெடுப்பதற்காக சரியான அரசியல் தலைமையை ஏற்றுக்கொள்ள வேண்டும். தொண்ணூறுகளில் தீவகத்தில் காலடி பதித்த நாம் அப்பிரதேச மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காகவும் தொண்ணூற்று ஏழில் யாழ்.குடாநாட்டில் காலடி பதித்து மக்களது வாழ்வாதாரத்திற்காகவும் பிரதேசங்களின் அபிவிருத்திக்காகவும் எம்மை அர்ப்பணித்து செயலாற்றி வருகின்றோம்.

ஆனால் தமிழ் மக்கள் துன்ப துயரங்களை எதிர்கொண்டபோது உல்லாச வாழ்வை வாழ்ந்தவர்களின் வெறும் வெட்டிப் பேசசுக்களால் எதனையும் செய்துவிடப் போவதில்லை. முதலில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையானவற்றை முன்னெடுத்து படிப்படியாக உரிமையை வென்றெடுப்போம். எம்மை நாமே ஆளுகின்ற நிலையை உருவாக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழியில் தொடர்ந்தும் செயற்படத் தயாராகவுள்ளோம்.

இப்பிரதேச மக்களின் இயல்பு வாழ்விற்குப் பெரும் இடையூறாக இருக்கின்ற மதுபான விற்பனை நிலையத்தை அகற்றுவது தொடர்பில் கவனத்தில் கொள்வதுடன் இச் சனசமூக நிலையத்தில் இயங்குகின்ற முன்பள்ளிக்கான விளையாட்டு முற்றம் ஒன்றை இவ் வருடத்திற்கான எனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியின் மூலம் அமைத்துத் தருவேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஈ.பி.டி.பியின் தேசிய அமைப்பாளரும் பனை அபிவிருத்திச் சபையின் தலைவருமான பசுபதி சீவரத்தினம் (கிபி), வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் அரிகரன் உட்பட நிகழ்வில் கலந்து கொண்ட பலர் உரை நிகழ்த்தினர்.



இந்நிகழ்வில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பஞ்சலிங்கம், சமுர்த்தி அலுவலர் கிருஸ்ணலிங்கம், பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் திருமதி ந.சந்திரா, வலி.தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் உதயகுமார் மற்றும் கிராம பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# குறைந்தளவு ஆசிரியர்களே பின்தங்கிய பகுதியில் பதவியேற்பு

(மாங்குளம்)

கட்டாய இடமாற்றத் திட்டத்தின் அடிப்படையில் வன்னி மாவட்ட பாடசாலைகளுக்கு யாழ் மாவட்டத்திலிருந்து இரண்டு வருட சேவை அடிப்படையில் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் தத்தமக்கு என அறிவிக்கப்பட்ட வலயங்களில் மார்ச் 15ஆம் திகதிக்கு முன் பதவி ஏற்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்த பொழுதிலும் கிளிநொச்சி தவிர்ந்த ஏனைய வலயங்களில் மிகக் குறைந்தளவு ஆசிரியர்களே பதவி ஏற்றுள்ளனர்.

இவ்வாறு கடந்த வருட முற்பகுதியிலும் கடந்த வருட இரண்டாந் தவணையிலும் இடமாற்றம் வழங்கப்பட்ட பொழுது துணுக்காய், மடு, முல்லைத்தீவு கல்வி வலயங்களுக்கு இடமாற்றம் பெற்றவர்களின் 25 வீதத்தினர் மட்டுமே பதவி ஏற்றமையும் குறிப்பிடத்தக்கது.

உரிய போக்குவரத்து வசதிகளோ, தங்குமிட வசதிகளோ ஏற்படுத்திக் கொடுக்காமையாலும் தமது குடும்பச் சூழ்நிலைகளாலும் மேற்படி வலயங்களுக்கு இடமாற்றம் பெற்றோர் பதவி ஏற்கத் தயக்கம் காட்டி வருவதாக சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பாரிய ஆசிரியர் பற்றாக்குறையுடன் இயங்கும் வன்னிப் பாடசாலைகளிலிருந்து விடுவிப்புப் பெற்றுப் பல ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் சென்றதால் இவ்வலயங்களில் பாரிய ஆசிரியர் பற்றாக்குறை எற்பட்டுள்ளது. (42)

# புதிய நிர்வாகிகள்

(வடமராட்சி)

மாமுனை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில நடைபெற்ற போது கீழ்காண்போர் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக வே.சிறிசங்கர், உபதலைவராக செ.பிறேம்குமார், செயலாளராக சி.ரகு, உப செயலாளராக ந.இரத்தினசிங்கம், பொருளாளராக பூ.தபேந்திரன், நிர்வாக சபை உறுப்பினர்களாக ச.சுந்தரம்பிள்ளை, ப.புவிதா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (70)

# செயலமர்வுக்குச் சென்ற ஆசிரியர்களின் அவலம்

(மாங்குளம்)

இந்துக் கலாசாரத் திணைக்களமும் வடமாகாணக் கல்வித் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த வன்னிப் பகுதியில் க.பொ.த. உயர்தரத்தில் இந்து நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான 3 நாட்கள் கொண்ட வதிவிடச் செயலமர்வு ஒன்று வவுனியா சுத்தானந்த இளைஞர் சேவை மண்டபத்தில் கடந்த 14ஆம், 15ஆம், 16ஆம் திகதிகளில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச் செயலமர்விற்கு வன்னி மாவட்டப் பாடசாலைகள் யாவற்றிலும் இருந்து இந்து நாகாிக பாட ஆசிரியர்கள் அழைக்கப்பட்டு உணவு, தங்குமிட வசதி தேவையானவர்களின் விபரங்களும் கோரப்பட்டிருந்தது.

எனவே வன்னிப் பகுதி கல்வி வலயங்களான கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு, வவுனியா வடக்கு ஆகிய சகல கல்வி வலயங்களிலும் இருந்து பெருமளவான பணத்தினைப் பிரயாணச் செலவாக செலவிட்டு ஐம்பதிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வவுனியாவிற்குச் சென்று செயலமர்வு நடத்தத் திட்டமிட்டிருந்த இடத்திற்குச் சென்ற பொழுது குறிப்பிட்ட இடத்தில் எவ்வித அதிகாரிகளையும் காணவில்லை.

மண்டப நிர்வாகிகளிடம் வினவிய பொழுது எவ்வித ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வவுனியாவில் பணிபுரியும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணியாளர் சம்பவத்தினை அறிந்து உரிய இடத்திற்கு வருகை தந்து உயர் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு வினவிய பொழுது இதற்கான ஒழுங்குகள் எதுவும் இன்று மேற்கொள்ளப்படவில்லை என்றும் இப்பயிற்சிப் பட்டறை எதிர்வரும் மே மாதம் 29, 30, 31ஆம் திகதிகளில் நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் மீளத்திரும்பிய ஆசிரியர்கள் பாடசாலையில் லீவு பதியப்பட்ட நிலையில் அதனைக் கடமை லீவாக பதிவு செய்வதற்கு செயலமர்வு வரவுச் சான்றிதழ் இன்றி தமது சொந்த லீவாகப் பதியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (42)

# இளஞ்சுடர் வி.கழகத்தினரின் முன்மாதிரியான செயற்பாடு

(இளவாலை)


மீள்குடியமர தற்போது அனுமதிக்கப்பட்ட இளவாலை வடமேற்குக் கிராம அலுவலர் பிரிவிலுள்ள வசந்தபுரம் கிராமத்தில் இயங்கும் இளஞ்சுடர் விளையாட்டுக் கழகத்தினர் தமது கிராமத்தில் உள்ள சிறுவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் முகமாக மாலை நேரத்தில் மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றனர்.

கூலித் தொழிலாளர்களை அதிகமாகக் கொண்ட இக் கிராமத்தில் இச்செயற்பாட்டினை மேற கொள்வதால் பெற்றோர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். முற்றுமுழுதாக இலவசமாக மேற்கொள்ளப்படும் இச்செயற்பாட்டுக்கு மின்சார வசதியைக் கிராமத்தின் நலன் விரும்பி ஒருவர் ஒழுங்கமைத்துக் கொடுத்துள்ளார்.

மேலும் இக்கழகத்தின் செயறபாடுகளுக்கு மேற்படி பிரிவு கிராம அலுவலர் ஜே.அன்ரனிறோய் வழிகாட்டலும், ஆலோசனைகளும் வழங்கி வருகிறார்..

விளையாட்டுடன் மட்டும் நின்றுவிடாது சமூக நலத் திட்டங்களில் அக்கறை செலுத்தும் இக் கழகத்தின் செயற்பாட்டை சகலரும் பாராட்டுகின்றனர்.

# புத்தூர் கிந்துசிட்டி மயானம்



(வலிகாமம்)

புத்தூர் வடக்குப் பகுதியில் உள்ள கிந்துசிட்டி இந்து மயானம் புனரமைக்கப்படாது காணப்படுகிறது. நீண்ட காலமாக பற்றைக் காடாகவும் குப்பை கூழங்கள் மற்றும் பீங்கான்கள் அகற்றப்படாமல் தொடர்ந்தும் கொட்டப்பட்டு வருவதுடன் மலம் கழிக்கும் இடமாகவும் மாறி வருகின்றது.

இந்த இந்து மயானம் வலிகாமம் பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் இருந்து துப்புரவு செய்யப்படாமல் உள்ளது. எனவே உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இந்த மயானத்தின் புனிதத்தை மக்களால் பேணிக்காக்க முன்வருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். (116)

# வீதியைப் புனரமைப்பதில் பிரதேச சபைகள் இழுபறி

(வடமராட்சி)

அல்வாய் - சாமணந்தறை கோயில் வீதியைப் புனரமைப்புச் செய்வதில் இரண்டு பிரதேச சபைகளுக்கிடையில் இழுபறி நிலை கூணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குக் கீழ் இயங்கும் பருத்தித்துறை பிரதேச சபைக்கும், கரவெட்டிப் பிரதேச சபைக்கும் இடையில் காணப்படுவதால் வீதியைப் புனரமைப்பதில் 2 சபைகளும் ஒரு முடிவை எட்டவில்லை என பொது மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இவ்வீதி புனரமைப்புச் செய்ய முடியாத நிலையில் பல வருடங்களாகக் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இதனால் அவ்வீதியூடாகப் போக்குவரத்தை மேற்கொள்வோரே வெகுவாகப் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வீதியைப் புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

# மிகவும் மோசமான நிலையில் மட்டுவில் தெற்கு வீதி

(சாவகச்சேரி)

கைதடி - நுணாவில் ஊடான மட்டுவில் தெற்கு வீதி மிகமோசமாகச் சேதமடைந்துள்ளதால் இவ்வீதியூடான போக்குவரத்து நாளாந்தம் பல்வேறு சிரமங்களின் மத்தியில் இடம்பெறுவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதி மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திற்குச் செல்லும் வீதிகளில் ஒன்றாகக் காணப்படுவதுடன், குறிப்பாக ஏ-9 வீதியூடாகச் செல்வோர் இவ் வீதியூடாக ஆலயத்தைச் சென்றடையும் வீதியாகவும் காணப்படுகிறது.

இந்த நிலையில் இவ்வீதி குண்டும் குழியுமாகக் காணப்படும் நிலையில் வாகனப் போக்குவரத்துக்கள் அபாயகரமானதாகவே இடம்பெற்று வருகின்றது.

குறித்த ஆலயத்தில் பொங்கல் திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில் யாழ்.மாவட்டம் உள்ளிட்ட பிற மாவட்டங்களிலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி ஆலயத்திற்கு விரைவான பயணத்தை மேற்கொள்ள குறிப்பிட்ட வீதியை சம்பந்தப்பட்டவர்கள் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (11)

# கோவில் வீதியில் குன்றும் குழியும் தாராளம் நாளாந்தம் நடக்கும் விபத்துக்களும் ஏராளம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதான வீதியில் இருந்து ஆரம்பிக்கும் கோவில் வீதி மிக மோசமான நிலையில் சேதமடைந்துள்ளதால் அவ் வீதியூடாக பயணத்தை மேற்கொள் வோர் பெரும் இடையூறுகளை எதிர்நோக்குவதாக அவ்வீதியூடாக பயணிக்கும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அவ்வீதிப்பகுதி குண்டும் குழியுமாக சேதமடைந்துள்ளதால் ஒருவழிப்பாதையாகவே இருபுறமும் செல்லும் வாகனங்கள் பயணிக்க வேண்டியுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் எதிர் எதிரே வரும் வாகனங்கள மோதி விபத்தும் இடம் பெறுகினறன.

இதைவிட இவ்வீதியில் பிரபல்யம் வாய்ந்த குழந்தை யேசு தேவாலயம், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அமைந்துள்ளதுடன் பாடசாலை மாணவரகள் என பலரும் இவ்வீதியூ டாக பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்.நகரப்பகுதியில் பல்வேறு பகுதி வீதிகள் புனரமைக்கப்பட்டு வரும் இச்சந்தர்ப்பத்தில் முக்கிய பிரதான வீதிகள் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவும் உள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்வீதியை புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எஸ்)

## இளைஞர் சேவைகள் மன்ற அபிவிருத்தி வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2012ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் "இளைஞர் மனதிற்கு அறநெறி'' என்னும் ஆன்மீக அபிவிருத்தி வேலைத் திட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

யாழ்ப்பாணம் பல நோக்கு சுட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இவ் வேலைத்திட்டத்தில் பங்கு கொள்வதற்கு ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளை அன்றைய தினம் காலை 9 மணிக்கு பல நோக்கு சுட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்திற்கு சமுகம் தருமாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட உதவிப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# மனிதாபிமான உதவித்திட்டங்கள் வன்னிப் பகுதிக்கே அதிகளவு தேவை

### ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



நடந்து முடிந்த யுத்தத்தின் வடுக்கள் பெருமளவு எமது பெண்கள் மீதே காணப்படுகின்றது. உடல் உள ரீதியாக மட்டுமன்றி பொருளாதார ரீதியாகவும் அவர்கள் அதிகம் பாதிக்கப் பட்டுள்ளனர் அதிலும் வன்னிப் பிரதேசத்திலேயே இந்தப் பாதிப்புக்கள் அதிகம் எனவே மனிதாபிமான உதவிகளும் பெண்களுககான உதவித்திட்டங்களும் வன்னிக்கே அதிகளவு தேவையாக உள்ளது என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திர குமார் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் நவமங்கை நிவாசம் பெண்கள் வள மையத்தில் இடம்பெற்ற கணினிப் பயிற்சி முடித்த பெண்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் வன்னியில் பெருமளவு விதவைகள் காணப்படுகின்றனர். அதிலும் யுத்த காலத்தில் தங்களது குடும்பத்தலைவர்களை இழந்த இளம் விதவைகளே அதிகம் இவர்களது நிலைமைகள கவலை அளிப்பதாகவே உள்ளது நடந்து கொண்டிருக்கின்ற குடித்தொகை மதிப்பீடும் இது தொடர்பில் அதிர்ச்சிகரமான செய்திகளையே தரக்காத்திருக்கின்றன எனவேதான் இவ்வாறான பெண்களின் எதிர் காலம் தொடர்பில் அரசின் உதவிததிட்ட பொறிமுறைச் செயற்பாடுகள் போதுமானதாக இல்லை இதனால்தான் அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகளை அதிகம் எதிர்பார்க்கவேண்டியுள்ளது. குறிப்பாக வன்னியில் மனநலம் பாதிக்கப்பட்டுள்ள பெண்களை இயல்பு நிலைக்கு கொண்டு வந்து அவர்களை சமூக வாழ்வில் இணைத்து விடுவது தொடர்பிலும் அதிக அக்கறை செலுத்தவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின், கோப்பாய் கல்வியற்கல்லூரி பீடாதிபதி யோகராஜன், கோப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர பிறேமினி, நவமங்கை நிவாசம் நிலைய ஸ்தாபகர் சுகர்ணலீலா நவரட்ணம், லிட்டில் எய்ட் நிறுவன இணைப்பாளர் ஜெயபாலன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## மகளிர் தினமும், கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு வராகி மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தும் மகளிர் தின போட்டி விழாவும், கண்காட்சியும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாதர் சங்கத்தலைவி திருமதி திருநாவுக்கரசு சீதாலட்சுமி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி நாடளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலெஸ்ரின் (உதயன்), நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவருமான அ.இரவீந்திர தாஸன், நல்லூர் பிரதேச செயலக திட்டப்பணிப்பாளர் எஸ்.சுரேந்திரநாதன், மீள் எழுச்சித்திட்ட பிரதித்திட்டப்பணிப்பாளர் எஸ்.சுதர்சன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கிராம அலுவலர் திருமதி. காயத்திரி ரஜீவ், சமுர்த்தி உத்தியோகத்தர் அ.பிறைசூடி, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பா.மாலினி, திருமதி சுமதி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## முதியோர் கழகம் அங்குரார்ப்பணம்

(இளவாலை)

தற்போது மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இளவாலை வடமேற்கு கிராம அலுவலர் பிரிவுக்கான முதியோர் கழகம் வலி.வடக்கு பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வே.அருந்தவராசா தலைமையில் ஆரம்பித் துவைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில் கிராம அலுவலர் ஜே.அன்ரனிறோய் கலந்து சிறப்பித்தார். மீளக் குடியமர்ந்த முதியோர்களின் சமூக மேம்பாடு தொடர்பாகவும், மேற்படி பிரிவில் உள்ள முதியவர்களின் நலன்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக்கழகத்தின் தலைவராக க.நாகமுத்துவும், செயலாளராக ஆ.மாசிலாமணியும், பொருளாளராக திருமதி செ.அருந்தவமும், உப தலைவராக நா.

கணேஸ் மற்றும் உப செயலாளராக திருமதி.கி.வள்ளியம்மை ஆகியோரும் தெரிவுசெய்யப் பட்டனர்.

அத்துடன் மேற்படி கிராம அலுவலர் பிரிவில் உள்ள வசந்தபுரம், கூவில், சேந்தாங்குளம், சீந்திப்பந்தல், நாதோலை, வலித்தூண்டல், ஆகிய கிராமங்களில் இருந்து ஒருவர் வீதம் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## தேவையற்ற இரும்புச் சட்டங்கள்; பொது மக்களுக்கு இடையூறு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பஸ் நிலையத்திற்கு அருகாமையில் தேவையற்ற விதத்தில் இருக்கும் இரும்புச்சட்டங்களால் பொது மக்கள் பலரும் பல அசௌகரியங்களையும், விபத்துக்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

யாழ்.மின்சார நிலைய வீதியில் கொடிகாமம், காரைநகர் மற்றும் பருத்தித்துறை போன்ற இடங்களுக்கு செல்வதற்காக நிறுத்தப்படும் தனியார் பேருந்துத் தரிப்பிடத்தில் உள்ள இரும்புச் சட்டங்களாலேயே பொதுமக்கள பலரும் பாதிக்கப்படுகின்றனர்.

வளைந்தும் நெளிந்தும், நிலத்தில் பதிந்தும் இருக்கும் இந்த இரும்புச்சட்டத்தின் மீது கடந்த புதன்கிழமை அதிகாலை முல்லைத்தீவுக்குச் செல்லவிருந்த ஒருவர் தடக்குப்பட்டு விழுந்ததில் முழங்காலில் காயத்துக்குள்ளாகிய நிலையில் அவர பயணம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பாக கவனமெடுத்து அவ்விடத்தில் தேவையற்ற விதத்தில் இருக்கும் இரும்புச்சட்டங்களை பொதுமக்களினதும், கொடிகாமம், பருத்தித்துறை மற்றும் காரைநகர் போன்ற இடங்களுக்குச் செல்லும் பயணிகளின் அசௌகரியத்தை முன்னிட்டும் அப்புறப் படுத்துமாறு பாதிக்கப்படுவோர் கேட்டுக்கொள்கின்றனர். (138)

## மல்லாவியில் ஒருவகைக் காய்ச்சல்

(மல்லாவி)

மல்லாவி வைத்தியசாலையில் ஒருவகைக் காய்ச்சலினால் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது.

தற்போது ஏற்பட்டு வரும் வரட்சியினால் காய்ச்சல் நோய்த் தாக்கத்தினால் வைத்தியசாலையில் நோயாளர் வருகை அதிகரித்துக் காணப்படுகிறது.

80 வீதம் சிறுவர்கள் தீவிர நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வைத்தியசாலை பல வளப்பற்றாக்குறையுடன் இயங்கி வருகின்றது.

இங்குவரும் பல்வேறு நோயாளர்கள் பல்வேறு நெருக்கடிகள் மத்தியிலும் சிகிச்சை பெறறு வருகின்றனர்.

இரத்தப் பரிசோதனை ஆய்வு கூடம் இருந்தும் ஊழியர் பற்றாக்குறையால் செயலிழந்துள்ளது. 5 நிரந்தர வைத்தியர்களுடன் 3 வைத்தியர்கள் தற்காலிக மாக சேவையாற்றி வருகின்றனர். (143)

## முரசின் இன்றைய பலன்

(18.03.2012 –ஞாயிற்றுக்கிழமை)

கர வருஷம் பங்குனி 05 ஆம் திகதி. ஏகாதசி முன்னிரவு 7.04 வரை. நட்சத்திரம் உத்தராடம் முற்பகல் 7.35 வரை. அமிர்தயோகம், ஏகாதசி விரதம். இராகுகாலம் 4.48 - 6.18 வரை. சுபநேரம் 9.18 - 10.48 வரை. எமகண்டம் 12.18 - 1.48 வரை. குளிகைகாலம். 3.18 - 4.48 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கடமையில் ஆர்வம், மருத்துவச் செலவுகள், திருமணப்பிரஸ்தம், வேலைவாய்ப்பு. |
| ரிஷபம் | புதிய தகவல், சுற்றுலாப்பயணம், கல்வியில் மேன்மை, குடும்பத்தில் திருப்தி. |
| மிதுனம் | நிதானம் தேவை, மறுமணம் கைகூடும், புதிய நண்பர் அறிமுகம், தந்தை வழி இலாபம். |
| கடகம் | பணமுடை, தொழில் முன்னேற்றம், மனத் தெளிவு, பெற்றோரால் மகிழ்ச்சி. |
| சிம்மம் | வருவாய் உயரும், உடல் ஆரோக்கியம், செல்லுமிடம் சிறப்பு, பிழவாதம் கூடாது. |
| கன்னி | சந்தோசம், உதவிகள் தடைப்படும், பெற்றோரால் உதவி, எதிர்பாராத இலாபம். |
| துலாம் | புது முயற்சி, மன உழைச்சல், குடும்பச் செலவு அதிகரிக்கும், சிந்தித்து முதலீடு செய்யவும். |
| விருச்சிகம் | நற்செய்தி, மருத்துவச்செலவு, வாக்குறுதிகளை தவிர்க்கவும், பணப்புழக்கம். |
| தனுசு | வாக்கு சாதுர்யம், மறைமுக வருவாய்களில் கவனம், விளம்பர அனுகூலம், இடமாற்றம். |
| மகரம் | நண்பர் உதவி, வெளிநாட்டு வாய்ப்பு, குடும்பத்தில் ஒற்றுமை, திருமணம் கைகூடும். |
| கும்பம் | குடும்ப நலம், சுபகாரியங்கள், ஆரோக்கியம் பாதிப்பு, எதிர்பாராத பயணம். |
| மீனம் | சாதாரணமானநாள், தடைப்பட்ட காரியம் கை கூடும், குடும்பத்தில் ஒற்றுமை, வீண்பழி கேட்டல். |

## பொதுப்பரீட்சை வினா விடைகளை விற்பனை செய்ய அனுமதி பெறவேண்டும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் பொதுப்பரீடசைகளுக்கு வினா விடைகளைப் பதிப்பித்து விற்பனை செய்பவர்கள பரீட்சைத் திணைக்களத்தில் பதிவு செய்து அனுமதி பெறப்பட வேண்டும என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் க.பொ.த.சாதாரண/ உயர்தரப்பரீட்சைகள்,பொதுத்தகவல், தொழில் நுட்பப்பரீட்சை,தரம் 5 புலமைப்பரீட்சை ஆகியவற்றுக்கு வினாகள் விடைப் புத்தகங்களை பதிப்பித்து விற்பனை செய்பவர்களே பரீட்சைத் திணைக்களத்தின் அனுமதியைப் பெறவேண்டும்.

பொலவத்தை, பந்தரமுல்லவில் அமைந்துள்ள பரீட்சைத் திணைக்கள நிர்வாகக்கிளையில் 500 ரூபா செலுத்தி பதிவுகளை மேற்கொளவதற்கு விண்ணப்ப படிவத்தினையும், விபரங்களையும் பெற்று அனுமதி வினா விடைகளைப் பதிப்பித்து விற்பனை செய்யுமாறு அறிவிககப் பட்டுள்ளது.

# சுரேஷ் - சுமந்திரன் மோதல் முற்றுகிறது!

**சுரேஷ் சார்பு இணையத்தளத்தில் "அடுத்த லக்ஷ்மன் கதிர்காமர் உருவாகி விட்டார்" என்ற தலைப்பில் இளந்தி என்பவர் எழுதியிருக்கும் கட்டுரையிலிருந்து...**

அழகிய காளான் போன்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு புதிய நச்சுக் காளான் உருவாகித் துர்நாற்றம் வீசுகிறது. எம்முடைய எதிரி, எமது மண்ணில், எமது இடத்திலேயே பிறந்து விட்டான் என்று ஒரு புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் எழுதினார்.

வீரன் முளைக்கும் போதே துரோகியும் பிறந்து விடுகிறான். ஆனால் வீரனின் வெற்றிக்கு முன்பே துரோகியின் தோல்வி அறிவிக்கப்படுகிறது. இது வரலாற்றுச் செய்தி. விடுதலைப் புலிகள் வளர்த்தெடுத்த விடுதலை இயக்கம் இன்று துரோகிகளின் வரவால் மந்தநிலை அடைந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் பெயரைச் சொல்லி வாக்குச் சேகரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தடம் பிரண்டு தமிழினத்திற்குத் துரோகம் செய்கின்றனர். இருக்கையில் அமர மறுத்தபடி ஒரு தேர்தல் தொகுதி ஆசனத்திற்காக புலிகளிடம் மன்றாடிய இரா.சம்பந்தனை வரலாறு மறக்கவில்லை.

புலிகளிடம் மன்றாடிப் பெற்ற பதவியை இன்று பேரம் பேசும் கருவியாக சம்பந்தன் பயன்படுத்துகிறார். தமிழர்களுடைய இழந்த உரிமைகளைப் பெற்றுக்



கொடுக்க முடியாவிட்டால் பதவியைத் துறந்திருக்கலாம். அதைச் செய்யாமல் பதவியில் தொங்கிக் கொண்டு இருப்பவர்களை மன்னிக்க முடியவில்லை.

மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் என்ற 48 வயது கொழும்பு வழக்கறிஞரைத் தமிழ் தேசிய கூட்டமைப்பு தனது விருப்பு வாக்குப் பலத்தின் மூலம் ஏப்ரல் 2010இல் நாடாளுமன்ற உறுப்பினராக்கியது. மக்களால் தெரிவு செய்யப்படாத சுமந்திரன் இப்போது கூட்டமைப்பின் வழிகாட்டியும் பேச்சாளனுமாகி விட்டார்.

எம்.ஏ.சுமந்திரனுக்கும் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் இடையில் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. இருவரும் கொழும்பைத் தளமாகக் கொண்டவர்கள். இருவரும் வழக்கறிஞர்கள், நெருக்கமான சிங்களத் தொடர்பு உடையவர்கள். ஈழத் தமிழர்களை விற்பதற்குத் தயாரானவர்கள். சுமந்திரனும் அமைச்சராக வரலாம் என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழனைக் கொண்டே தமிழன் வாயில் மண் போடும் இராசதந்திரத்தை சிங்களவர்கள் கடைப்பிடிக்கின்றனர். சிங்களவர்களிலும் பார்க்கக் கூடுதலான சிங்களத் தன்மையை வெளிப்படுத்திய கதிர்காமர் தமிழ்த் தேசியத்திற்குச் செய்த தீமைகள் ஏராளம். துரோகிகள் வரிசையில் அவருக்கு முதலிடம் உண்டு.

சுமந்திரன் கடந்த இரு வருடமாக கதிர்காமரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி கூட்டமைப்பை ஈழத் தமிழினத்தின் விடுதலை அபிலாசைகளுக்கு முரணான வழிகளில் அழைத்துச் செல்கிறார். இவரைப் பற்றிய பலமான சந்தேகங்கள் தமிழர் மனதில் எழுந்துள்ளன.

சென்ற வருடம் இலண்டனில் பேசும் போது சிங்கள அரசு தரக் கூடியதை மாத்திரம் கேட்க வேண்டும் என்று சொன்னார். போராடிய இனம் யாசிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டதை இந்தப் பேச்சில் இருந்து உணரலாம். இந்த வருடம் ஜெனிவா மனித உரிமைக் கவுன்சில் மாநாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணித்துள்ளது.

கொழும்பு அரசு சென்ற மாதத்திற்கு முன்பே மகிந்த சமரசிங்க தலைமையில் ஒரு குழுவை ஜெனிவாவுக்கு அனுப்பிப் பிரசாரம் செய்கிறது. தமிழர்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அர்த்தமற்ற புறக்கணிப்பை மேற்கொள்கிறது.

இதற்காகவா வடக்கு கிழக்கு மக்கள் உங்களைத் தெரிவு செய்தார்கள்.? ஈழத் தமிழர்களின் உள்ளக் குமுறலை வெளிப்படுத்த வேண்டிய நீங்கள் அரசுக்குச் சாதகமான மவுனம் காக்கிறீர்கள். வல்லரசுகளின் ஆலோசனைப்படி தான் நாம் போகாமல் விட்டுள்ளோம் என்ற விளக்கம் வேறு.


எம்.ஏ.சுமந்திரனின் வழிகாட்டலில் கூட்டமைப்பு அரசின் கண்துடைப்பு நல்லிணக்கக் குழு அறிக்கையை ஏற்கத் தயாராகி விட்டது. இந்த அறிக்கையின் முக்கிய பரிந்துரை என்ன .தெரியுமா.? இலங்கையில் எந்த இனத்திற்காவது அதன் எந்தப் பகுதியாவது உரிமையாவதை அனுமதிக்கப்பட மாட்டாது. அதாவது புலிகளின் தாயகக் கோட்பாடு ஒட்டு மொத்தமாக நிராகரிக்கப்படுகிறது.

2020 இங்கு முன்பு நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கைப் பரிந்துரையை செயற்படுத்துவேன் என்ற மகிந்த ராஜபக்ஷவின் வாக்குறுதியில் உள்ள பயங்கரத்தை விளங்காதவன் தலை இல்லாத தமிழனாகக் கருதப்படுவான்.

**- இளந்தி**

இவ்வாறு சுரேஷ் சார்பு இணையத்தளம் தேசிய அதிதீவிரவாதத்தைக் கக்கி தமிழரசுக் கட்சியினரைத் துரோகிகள் என வசைபாடி எழுதியிருக்கிறது. கூட்டமைப்புக்குள் தன்னை ஓரங்கட்டும் தமிழரசுக் கட்சியை எதிர்கொள்ள "தீவிரத் தேசியவாதி நானே" என்று காட்ட வேண்டிய தேவை சுரேஷுக்கு எழுந்துள்ளது. ஆனால், சுரேஷ் இன்னும் தமிழரசுக் கட்சி எம்பியாகவே நீடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழுகிய காளான் எனவும் நச்சுக் காளான் எனவும் தன் சார்பு இணையத்தளத்தில் எழுத வைத்திருக்கும் சுரேஷ், அங்கிருந்து கழர முடிவெடுத்து விட்டதாகவே தமிழ் அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர். அடுத்த முறையும் எம்.பி கதிரை வேண்டும் என்பதற்காக, அரசியலில் நேற்று முளைத்த சுமந்திரனுக்குக் கீழ்ப்பட்டு நிற்கும் அவமானத்தைச் சகித்துக் கொண்டு கூட்டமைப்பில் தொங்கக் கூடியவரல்ல சுரேஷ் என்கிறார்கள் அவர்கள்.

## கறுப்பு தாஜ்மஹால்



தாஜ்மஹால் என்றாலே அதன் வெண்ணிறம்தான் அனைவருக்கும் நினைவில் வரும். ஆனால் கறுப்பு நிற தாஜ்மஹால் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று ஷாஜகான் நினைத்தார்.

தாஜ்மகாலை இந்திய மற்றும் ஆசிய தொழிலாளர்கள் 20 ஆயிரம் பேர் சேர்ந்து உருவாக்கினார்கள். தாஜ் மஹாலின் அழகு வேலைகளை அஸ்டின் டி போர்க்டெக் என்ற பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவரும், வெரோனியா என்ற வெனிஸ் நகரை சேர்ந்தவரும் செய்தனர். தாஜ மஹாலின் உயரம் 137 அடி. இதில் குர்-ஆனின் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.


பேரரசர் ஷாஜஹானுக்கு நிறைவேறாத ஆசை ஒன்றும் இருந்தது. அது தனது மனைவி மும்தாஜுக்கு வெள்ளை பளிங்கு கல்லில் சமாதி எழுப்பியதுபோல் தான் இறந்தபின் தனக்கென்று ஒரு சமாதி கட்ட நினைத்தார். யமுனை நதியின் மறுகரையில் தாஜ்மஹாலின் அச்சு அசலாக கறுப்பு பளிங்கு கற்களைக் கொண்டு அது கட்டப்பட வேண்டும், மேலும் அந்த இரு சமாதிகளையும் ஆற்றின் குறுக்கே வெள்ளியால் ஒரு பாலம் கட்டி இணைக்க வேண்டும் என்றும் நினைத்தார்.

அது மட்டுமல்லாமல் வெண் பளிங்கு கல்லால் ஆன தாஜ்மகாலின் உருவம் கரும் பளிங்கு கல்லால் ஆன தனது சாமாதியில் பிரதிபலிக்க வேண்டும் என்றும் விரும்பினார். ஆனால் இதற்கான ஆரம்ப கட்ட பணிகளை தொடங்கும் முன்னே ஷாஜகான் காலமானார். அவர் நினைத்தபடி கறுப்பு தாஜ்மஹால் கட்டப்பட்டிருந்தால் இதன் புகழ் இன்னும் பல மடங்கு கூடியிருக்கும்.

1971இல் இந்தியா, பாகிஸ்தான் போரின்போது தாஜ்மகால் மூடப்பட்டது. என்னதான் இஸ்லாமியர்களின் புனித குர்-ஆனின் வாசகங்கள் தாஜ்மஹாலில் பொறிக்கப்பட்டிருந்தாலும், அதை தாக்கப் போவதாக தகவல் வந்ததும் இந்தியா விரைந்து செயற்பட்டது. தாஜ்மஹாலில் இருந்து பிரதிபலிக்கப்படும் ஒளி பாகிஸ்தானிய போர்விமானங்களை தாஜ்மஹால் பக்கம் திருப்பிவிடும் என்பதால், பிரம்மாண்டமான அந்த தாஜ்மஹாலை செடி, கொடி, மலர்கள் கொண்டு வெண்மை நிறம் சிறிதும் தெரியாதபடி மூடிவிட்டார்கள். போர் முடியும்வரை தாஜ்மஹாலை மறைத்து வைத்திருந்து காப்பாற்றினார்கள்.

போலி தாஜ்மஹால் ஒன்றும் உண்டு. அவுரங்காபாத்தில் அவுரங்கசீப் ஒரு கட்டடத்தை கட்டினார். அது தாஜ்மஹாலின் போட்டோ கொப்பி போல் அப்படியே இருந்தது. அந்த கட்டடத்திற்கு பெயர் "பீபிகா மாக்பெர்ரா" என்பது. ஆனால், யாரும அந்தப் பெயரை சொல்லி அழைப்பதில்லை. இதை டூப்ளிகெட் தாஜ்மஹால் என்றே சொல்லுகிறார்கள்.

## தெரிந்து கொள்வோம்!



- காந்திக்கு இதுவரையில் 42 நாடுகள் தபால் முத்திரைகள் வெளியிட்டுள்ளன.
- பலூனைக் கண்டுபிடித்தவர்கள் ∴பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜேக்வின் மற்றும் ஜோசப் பொண்டிங் கோல்பியா- ஆண்டு 1783.
- திருவள்ளுவர் திருக்குறளில் பயன்படுத்தாத உயிரெழுத்து "ஔ"
- மாமல்லபுரத்தின் பழங்காலப் பெயர் "ஏழுகோபுரப்பட்டினம்"
- ஒட்டகச்சிவிங்கியின் நாக்கு அதன் கழுத்தைச் சுத்தம் செய்யும் அளவுக்கு நீளமானது. அதன் நீளம் 50 செ.மீ.
- மனிதனின் பேச்சைக் க்வனித்து அதையே திரும்பச் சொல்லும் திறன் படைத்தது டொல்பின். சொன்னதைச் சொல்வது கிளிப்பிள்ளை மட்டுமல்ல, டொல்பின் பிள்ளையும்தான் என உயிரியலாளர்கள் நிரூபித்துள்ளனர்.
- புகழ்பெற்ற ஈபிள் டவரின் பிளானை வரைய 6,000 சதுர யார் துணிகள் தேவைப்பட்டன.
- மாதத்தை முதலர்கவும் திகதியை இரண்டாவதாகவும் எழுதுவது அமெரிக்கர்களின் வழக்கம்.
- புத்தர் பிறந்தது, முக்தி நிலை அடைந்தது, இறந்தது என எல்லாமே நடந்தது பௌர்ணமியில்.
- ஆசியா என்ற சொல்லின் சரியான பொருள் சூரியோதய பூமி என்பதாகும்.

## வோல்ற் விட்மனின் "புல்லின் இதழ்கள்" கவிதைத் தொகுப்பின் முன்னுரையிலிருந்து...




இளைய கவிஞனே!
மண்ணையும் சூரியனையும்
பிராணிகளையும் நேசி!
பணத்தை இலட்சியம்
செய்யாதே!
கேட்கிறவனுக்கெல்லாம் கொடு!
அறிவில்லாதவர்கள்
சார்பாகவும், பித்தர்கள்
சார்பாகவும் போராடு!
உன் வருமானத்தையும்,
உழைக்கும் சக்தியையும்
பிறருக்காகச் செலவிடு!
எதேச்சாதிகாரிகளை வெறு!
கடவுள் குறித்து வாதாடாதே!
மக்களிடம் பொறுமையுடனும்
சகிப்புத்தன்மையுடனும்
நடந்துகொள்!
தெரிந்ததோ, தெரியாததோ
– எதற்கும் அடிபணியாதே!
தனிமனிதனோ, மனிதக்
கூட்டமோ – யாருக்குமே
தலைவணங்காதே!
படிக்காத
மேதைகளிடையிலும்,
இளைஞர்களோடும்,
குழந்தைகளின்
தாய்மார்களோடும் தாராளமாகப்
பழகு!
உன் வாழ்க்கையில்
ஒவ்வொரு வருடத்திலும்
ஒவ்வொரு பருவத்திலும் இந்தக்
கவிதை இதழ்களைத் திறந்த
வெளியில் படி!
பள்ளியிலோ, கோயிலிலோ,
புத்தகத்திலோ உனக்குச்
சொல்லப்பட்டவைகளை எல்லாம்
மறுபரிசீலனை செய்!
உன் ஆன்மாவை எதெல்லாம்
அகௌரவப்படுத்துகிறதோ
அதையெல்லாம் தள்ளிவிடு!
இப்படியெல்லாம் செய்தால் உன்
கதை கூட பெரும் கவிதையாகும்!
உன் சொற்கள் மட்டுமல்லாமல்,
உனது உதடு, முகம், கண்ணிமைகளின்
இடைவெளி ஆகியவற்றிலுள்ள
ஒவ்வொரு கோடும், உன் உடலின்
ஒவ்வொரு அசைவும், ஒவ்வொரு
எலும்புப் பொருத்தும் - சரளமான
செறிவோடு கவிதை சொல்லும்.




# windows XP : பழைய கழிதல்

விண்டோஸ் 8 உம் பரவலாகப் பயன்பாட்டிற்கு வந்துவிட்டதால் விண்டோஸ் எக்ஸ்பி பயன்பாடு படிப்படியாகக் குறைந்து விடுமா அதற்கான மைக்ரோசொப்டின் ஆதரவு நின்றுவிடுமா என்பது பலரின் மனதில் தற்போதுள்ள குழப்பம். விண்டோஸ் எக்ஸ்பி பயன்படுத்துவது படிப்படியாகக் குறைந்து வருவது உண்மையே. இருப்பினும் அதிகம் பயன்படுத்தப்படும் ஒப்பரேட்டிங் சிஸ்டம் இதுதான். இன்னும் 45% பேரால் எக்ஸ்பி பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், சென்ற ஆண்டு பெப்ரவரியில், எக்ஸ்பி 57% பேரால் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. விண்டோஸ் 7 படிப்படியாக முன்னேறி வருகிறது (38%). மைக்ரோசொப்ட் நிறுவனமும், கம்ப்யூட்டர் பயன் படுத்துபவர்களை, எக்ஸ்பி சிஸ்டத்தினை விட்டு விட்டு, விண்டோஸ் 7க்கு மாறச் சொல்கிறது. 2014 ஆம் ஆண்டு ஏப்ரலுக்குப் பின்னர், மைக்ரோசொப்ட் விண்டோஸ் எக்ஸ்பிக்கு தந்து வரும் ஆதரவை நிறுத்திவிடும். அதாவது, எக்ஸ்பியில் உள்ள பிழைகளைச் சரி செய்திடும் அப்டேட்டட் பைல்களை வெளியிடாது. எனவே எக்ஸ்பி பயன்படுத்துபவர்கள் விண்டோஸ் 7 இற்கோ 8 இற்கோ மாறிக் கொள்வது நல்லது. கம்ப்யூட்டரில் விண்டோஸ் 7 பதிய இயலாது எனில், எக்ஸ்பி உள்ள சிஸ்டத்தில் வைரஸ் எதுவும் அணுகாத வகையில் பாதுகாப்பு மேற்கொள்ள வேண்டும். இணைய இணைப்பினைத் தவிர்க்க வேண்டும்.













# வாழ்க்கையை மாற்றப்போகும் புளூடூத்

வயர் இணைப்பு எதுவுமின்றி இணைபைத் தரும் புளூடூத் தொழில் நுட்பம், எப்படி நம் வாழ்வையே மாற்றும்?

புளூடூத் முதலில் நமக்கு அறிமுகமான போது, பைல் மற்றும் டிஜிட்டல் தகவல்கள் பரிமாற்றத்திற்கு மிக அருமையான வசதி என அனைவரும் பாராட்டினோம் பயன்படுத்தினோம். பின்னர், இதில் பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டி இருந்தது. தகவல் பரிமாற்றத்திற்கான சாதனங்கள் இணையாக இருந்து இணைப்பதில் சிக்கல், பாஸ்வேர்ட் அமைத்து இயக்குவதில் பிரச்சினை, திடீரென தகவல் இணைப்பு அறுந்து போதல், மற்றும் பிற உடனடியாகத் தீர்க்க இயலாத சிக்கல்களும் இருந்தன. இவை அனைத்தும் புளூடூத் 4 தொழில் நுட்பம் தீர்த்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




எப்படி தீர்க்கும்?

புளூடூத் தொழில் நுட்பம் இயங்கும் தொலைவு அதே 300 அடியாக உள்ளது. புளூடூத் 2ஐக் காட்டிலும் பதிப்பு 3, சற்றுக் கூடுதல் வேகத்தில் டேட்டாவினைக் கடத்தியது. பதிப்பு 2.1 ன் வேகம் 2ஆமிள ஆக இருந்தது. பதிப்பு 3ன் வேகம் 26Mbps ஆக உள்ளது. இது வீடியோ ஸ்ட்ரீமிங் போன்ற பணிகளுக்கு மிகவும் உதவியது.

புளூடூத் 4 இவற்றைக் காட்டிலும் கூடுதல் திறன் கொண்டதாக இருக்கும். ஐந்திலிருந்து பத்து மடங்கு வேகக் கூடுதல் இருக்கும். அதிக நாட்கள் மின்திறன் தரும் பற்றரியுடன் இயங்கும் திறன் கொண்டதாக இருக்கும்.

புளூடூத் 4 இந்த தொழில் நுட்பம் கொண்ட போன்களுடன் எளிதில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடியும். லப்டொப், மொபைல் போன் மற்றும் ரௌட்டர் போன்ற சாதனங்களின் இணைப்பு, புளூடூத் பதிப்பு 4 மூலம் அதிகத் திறன் கொண்டதாக அமையும். இந்த தொழில் நுட்பத்திற்கேற்ப வடிவமைக்கப்படும் சாதனங்கள் அனைத்தும், புளூடூத் பதிப்பு 2 மற்றும் 3 ஆகியவற்றையும் கையாளும். புளூடூத் 4 ஏற்கனவே Motorola_Droid_Razr_Maxx ஆகிய மொபைல் போன்களில் இணைக்கபட்டுள்ளது.

இந்த புதிய தொழில் நுட்பத்திற்கு Bluetooth Smart Ready எனப் பெயர் இடப்பட்டுள்ளது. இது குறித்த கூடுதல் தகவல்களுக்கு http://www.bluetooth.com/ Pages/SmartLogos.aspx என்ற முகவரியில் உள்ள தளத்தை அணுகவும்.

# விண்டோஸ் 8 இயக்க என்ன தேவை?



விண்டோஸ் 7 சிஸ்டம் இயங்கும் அனைத்து பெர்சனல் கம்ப்யூட்டர்களிலும், விண்டோஸ் 8 இயங்கும். கீழ்க் காணும் Hardware தேவைகளை இதற்கெனப் பட்டியலிடலாம்.

1. ப்ரொசசரின் இயக்க வேகம் 1கிகா ஹெர்ட்ஸ் அல்லது அதற்கும் மேலாக.

2. கம்ப்யூட்டர் 32 பிட் எனில் ராம் மெமரி 1 ஜிபி 64 பிட் எனில் ராம் மெமரி 2 ஜிபி குறைந்தது இருக்க வேண்டும்.

3. எப்போதும் தேவையான காலி டிஸ்க் இடம், 32 பிட் எனில் 16 ஜிபி. 64 பிட் எனில் 20 ஜிபி.

4. DirectX9 கிராபிக்ஸ் டிவைஸ் WDDM 1.0 உடன் இருக்க வேண்டும் அல்லது இதனைக் காட்டிலும் உயர்வாக இருக்க வேண்டும்.

விண்டோஸ் 8 சிஸ்டம் தரும் சில வசதிகளைப் பயன்படுத்த, சில கூடுதல் ஹார்ட்வேர் தேவைகள் அவசியம். அவை, Snap feature பயன்படுத்த வேணடும் எனில், உங்கள் கம்ப்யூட்டரின் ரெசலயூசன் குறைந்த பட்சம் 1366X768 என இருக்க வேண்டும். நீங்கள் தொடுதிரை பயன்பாட்டினை மேற்கொள்வதாக இருநதால், மல்ட்டி டச் ஏற்கக்கூடிய லப்டொப்,டேப்ளட் அல்லது டிஸ்பிளே திரை கொண்ட மொனிற்றர் இருக்க வேண்டும். விண்டோஸ் 8 சிஸ்டம், ஒரே நேரத்தில் ஐந்து டச் பொய்ண்ட்களை இயக்கும் திறன் கொண்டது என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். விண்டோஸ் ஸ்டோர் பயன்படுத்த கட்டாயம் இன்டர்நெட் இணைப்பில் இருக்க வேண்டும்.

# வியப்பைத் தரும் விண்டோஸ் 8

மைக்ரோசொப்ட் தன் விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தின் அடுத்த பதிப்பின் சோதனைத் தொகுப்பினை, சென்ற பெப்ரவரி 29 அன்று, நுகர்வோர்களுக்கு வெளியிட்டுள்ளது. வெளியான முதல் நாளே, பத்து இலட்சத்திற்கும் அதிகமான எண்ணிக்கையில் இத்தொகுப்பு தரவிறக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதனைப் பெற விரும்புபவர்கள் http://windows.microsoft.com/ enUS/ windows8/download என்ற முகவரியில் உள்ள இணைய தளத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். தங்களிடம் உள்ள கம்ப்யூட்டரில் இந்த சோதனைப் பதிப்பினைப் பதிந்து இயக்க முடியுமா என்று அறிந்துகொள்ள விரும்புபவர்களுக்குப் பல இணைய தளங்கள் பதில் அளித்துள்ளன. அவற்றில் http://news.cnet.com/830110805_35738793375/canmypcrunthewindows8betatestbuild/ என்ற முகவரியில் உள்ள தளத்தில் தெளிவாகத் தகவல்கள் உள்ளன.

விரும்பும் யார் வேண்டுமானாலும், இறக்கிக் கொள்ளும் வகையில் இந்த பதிப்பு கிடைக்கிறது.


விண்டோஸ் 8 சிஸ்டம் தரும் புதிய வசதிகள் இவை:

ஒரு முற்றிலும் புதிய கம்ப்யூட்டிங் அனுபவத்தினைத் தருவதாக விண்டோஸ் 8 இருக்கும் என மைக்ரோசொப்ட் அறிவித்தது போலவே அனைத்தும் புதிய, எதிர்பாராத அனுபவங்களே இந்த சிஸ்டம் மூலம் நமக்குக் கிடைக்கின்றன., கடந்த இருபது ஆண்டுகளில் விண்டோஸ் சிஸ்டத்தில் நாம் கற்பனையில் கூட பார்க்க இயலாத விஷயங்கள் இப்போது கிடைக்கின்றன.

ஸ்டார்ட் பட்டனுடன் ஸ்கிரீன், வோல் பேப்பர், பைல்களுக்கான ஐகொன் என இருந்து வரும் டெஸ்க்டாப் முற்றிலும் மாற்றம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. இதனை மெட்ரோ (Metro) என மைக்ரோசொப்ட் அழைக்கிறது.

சிறிய ஓடுகள் அடுக்கி வைக்கப்பட்டது போல தோற்றத்திரை கிடைக்கிறது. இதனை கீ போர்ட், மவுஸ் வழியாக மட்டுமின்றி, தொடுதிரையாகவும் இயக்கலாம். இதனால் இந்த இன்டர்பேஸ் வகையை, டெஸ்க்ரொப் பெர்சனல் கம்ப்யூட்டர் மட்டுமின்றி, மொபைல் சாதனங்களிலும் பயன்படுத்தலாம். இதுவரை கீ போர்ட், மவுஸ் இயக்கியவர்கள், இனி படிப்படியாக தொடுதிரைக்கு மாறிவிடுவார்கள்.

ஸ்டார்ட் பட்டனுக்குப் பதிலாக, ஸ்டார்ட் ஸ்கிரீன் கிடைக்கிறது. இடது கீழாக முன்பு ஸ்டார்ட் பட்டன் இருந்த இடத்தில், மவுஸின் கேர்சரைக் கொண்டு சென்றால், சிறிய ஸ்டார்ட் ஸ்கிரீன் பொப் அப் ஆகிறது. அல்லது அந்த இடத்தில் ரைட் கிளிக் செய்தால், ஏற்கனவே நாம் பழகிப் போன Programs and Features, Network Connections, Device Manager, Command Prompt, Task Manager, Control Panel, Windows Explorer, Search, kw;Wk; Run ஆகிய பிரிவுகள் கிடைக்கின்றன.




**Charms Bar:** விண்டோஸ் 8 இயக்கத்தின் அடிப்படைக் கட்டமைப்பில் ஒன்று சார்ம்ஸ். சிஸ்டம் கொமாண்ட்ஸ் மற்றும் செட்டிங்ஸ் அண்ட் சேர்ச் (Settings, Search, Devices) என முக்கிய கட்டளைப் பெட்டிகள் இங்கு கிடைக்கின்றன. உங்கள் விரலை அல்லது மவுஸ் கேர்சரை, திரையின் மேல் வலது மூலைக்குக் கொண்டு சென்றால், Search மற்றும் Share வசதியுடன், மற்ற சாதனங்கள் மற்றும் Settings மேற்கொள்ள வழி கிடைக்கிறது. இவை உங்கள் அப்ளிகேஷன்களை இணைத்தும் இயக்குகிறது. எடுத்துக்காட்டாக, நீங்கள் இணையத்தில் உலா வந்து கொண்டிருந்தால், அதில் கிடைக்கும் லிங்க் ஒன்றை உங்கள் நண்பர்களுக்குத் தெரிவிக்க எண்ணினால், இந்த சார்ம்ஸ் மீது தடவினால் போதும். உடனே உங்கள் இமெயில் கிளையண்ட் புரோகிராம் திறக்கப்படும். அல்லது பேஸ்புக், டுவிட்டர் போன்ற புரோகிராம்கள் இயக்கப்படும். வழக்கமான இடது புறம் கீழாக உள்ள ஸ்டார்ட் பட்டன் இல்லை.

**Settings:** இதுவரை இல்லாத அளவிற்கு அதிக எண்ணிக்கையில் நமக்கு பலவகையான செட்டிங்ஸ் வழிகள் கிடைகின்றன. குறிப்பாக டேப்ளட் பிசிக்களில் கிடைப்பது போல இவை தரப்பட்டுள்ளன.

**Games:** இரண்டு கேம்ஸ் இணைந்து தரப்படுகின்றன. Pinball FX 2 மற்றும் Solitaire கிடைக்கின்றன. Solitaire விளையாட்டை திரையைத் தொட்டு விளையாட முடிகிறது. ஆனால் பலரும் விரும்பும் Minesweeper இல்லை.

**Explorer:** பழைய வகை டெஸ்க்டொப் இன்னும் கிடைக்கிறது. குறிப்பாக எக்ஸ்புளோரர் மிக வேகமாக இயங்குகிறது.

**Xbox Live:** சில எக்ஸ்பொக்ஸ் கேம்ஸ், லைவ் ஹப் என நம்மை இழுக்கும் விஷயங்கள் இதில் கிடைக்கின்றன.

*சீதோஷ்ண நிலை:* அன்றைய சீதோஷ்ண நிலை காட்டும் வசதி, சிஸ்டத்தில் இணைந்து கிடைக்கிறது.

பி.டி.எப். மற்றும் எக்ஸ்.பி.எஸ். பைல்களைக் கையாள, இதனுடன் ஒரு ரீடர் தரப்படுகிறது. சில அடிப்படை வசதிகளை மட்டுமே கொண்டிருந்தாலும், சிஸ்டத்தில் இணைத்துத் தரப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஒன்றுக்கு மேற்பட்ட அப்ளிகேஷன் புரோகிராம்களை இயக்குகிறீர்களா! அவற்றைப் பார்க்க வேண்டுமா? சிலவற்றின் இயக்கத்தினை நிறுத்த வேண்டுமா? உங்கள் விரலை அல்லது கேர்சரை திரையின் இடது மேல் மூலைக்குக் கொண்டு செல்லுங்கள். கிளிக் செய்தவுடன், அப்போது நீங்கள் இயக்கிக் கொண்டிருக்கும் அப்ளிகேஷன புரோகிராம்கள் காட்டப்படும். எந்த புரோகிராமினை நிறுத்த வேண்டுமோ, அதனை இழுத்து வந்து கீழாக விட்டுவிட்டால் போதும். நிறுத்தப்படும்.

**Semantic Zoom:** நீங்கள் இயக்கும் புரோகிராம்கள் குறித்து இன்னும் அறிய வேண்டுமா? Ctrl பட்டனை அழுத்திக் கொண்டு, மவுஸ் வீலைச் சுழற்றுங்கள். உங்களுக்கு Semantic Zoom கிடைக்கும். உங்கள் அனைத்து அப்ளிகேஷன்கள் குறித்தும் ஒரு மேம்போக்கான தோற்றம் கிடைக்கும். இவற்றைக் குழுவாக அமைகலாம் அவற்றின் பெயரை மாற்றலாம்.

**Photo Library:** போட்டோஸ் அப்ளிகேஷனில் கிளிக் செய்தால், பிரபலமான பேஸ்புக் மற்றும் பிளிக்கர் (Facebook and Flickr) தொடர்பு ஏற்படுகிறது. ஸ்கைட்ரைவும் இதில் காட்டப்படுகிறது.

விண்டோஸ் 8 சிஸ்டம் காட்டும் பைல் ட்ரான்ஸ்பர் டயலொக் பொக்ஸ் சிறப்பான மாற்றங்களைக் கொண்டுள்ளது. பைல் மாற்றப்படும் வேகம், மாற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நேரம் எனக் காட்டுவதோடு, டுப்ளிகேட் பைல்களைக் கண்டறிய சிறப்பான வசதிகளையும் கொண்டுள்ளது.

விண்டோஸ் 8 சிஸ்டத்துடன் கிடைக்கும், இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 10, முற்றிலும் புதிய தோற்றம் மற்றும் பயன்பாட்டுடன் உள்ளது. திரையின் முழு இடமும் நம் இணைய தளப் பக்கங்களுக்கே தரப்பட்டுள்ளது.

பிரவுசரின் இயங்கும் வேகம் இதுவரை இல்லாத அளவில் உள்ளது. புதிய பிரவுசர்களுக்கான தரம் மற்றும் வரையறைகளுடன், எச்.டி.எம்.எல்.5 சப்போர்ட் செய்திடும் வகையில், இது இயங்குகிறது.

கம்ப்யூட்டர் இயக்கத்தில் பிரச்சினை ஏற்பட்டு, விண்டோஸ் புதியதாகப் பதிந்து இயக்கப்பட வேண்டும் என்றால், சிஸ்டம் சிடி தேடி அலைய வேண்டியதில்லை. எந்த பைலையும் இழக்காமல், மீண்டும் இன்ஸ்டோல் செய்திட, இந்த சிஸ்டத்திலேயே வசதி தரப்பட்டுள்ளது.

இதில் தரப்பட்டிருக்கும் விண்டோஸ் டிபன்டர் (Windows Defender) கெடுதல் விளைவிக்கும் புரோகிராம் எது நுழைந்தாலும், உடனே அதனை அறிந்து நீக்கிடும் வேலையை மேற்கொள்கிறது.

இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் விண்டோஸ் 8 ஒரு சோதனைப் பதிப்பு தான். இறுதி வெளியீட்டிற்கு முன்னர், நிச்சயம் பயன் தரும் மாற்றங்கள் சில இருக்கும்.

# சர்வதேச ரீதியில் புலிகள் பற்றிய மாயை இன்னமும் மிகவலுவாகவே உள்ளது



(கொழும்பு)

இலங்கையில் விடுதலைப்புலிகள் தொடர்பான மாயையை யுதத முனையில் அரசாங்கம் உடைத்தெறிந்து விட்டது. எனினும் சர்வதேச ரீதியில் புலிகள் பற்றிய மாயை இன்றும் வலுவுடன் செயற்பட்டு வருகின்றது.

அமெரிக்க அரசாங்கம் தன்னுடைய இராணுவ வீரர்கள் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபடும் போதும் அவற்றை பெரிதுபடுத்தாமல் இலங்கை அரசாங்கத்தின் மீது யுத்தக் குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றது. அமெரிக்கா ஏன் இந்த வெவ்வேறான கொள்கையை கடைப்பிடிக்கிறதென்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை கட்டடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க கேள்வி எழுப்பினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக் கட்டடத்தில் உள்ள அறையொன்றில் நூற்றுக்கும் மேற்பட்ட வெளிநாடுகளின் இராஜதந்திரிகள், சர்வதேச மனித உரிமை ஆர்வலர்கள் போன்ற பலதரப்பட்ட சிவில் சமூக அமைப்பினர் முன்னிலையில் கடந்த புதன்கிழமை இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தொடருக்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சர்வதேச ரீதியில் இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள பல அமைப்புகள் இலங்கை அரசாங்கம் பேச்சளவிலேயே பாதிப்பிற்குள்ளான மக்களுக்கு பணி செய்கின்றதே ஒழிய அதை நடைமுறைப்படுத்தவில்லை என்று பொய்ப் பிரசாரம் செய்கின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ அரசாங்கமே யுத்தம் நடைபெற்ற பின்னர் நாட்டில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கும், யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருந்தால் அதுபற்றி விசாரணை செய்து குற்றம் இழைத்தவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கும் கற்றுக் கொணட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை அமைத்திருக்கிறது.

அரசாங்கம் பிரச்சினைகளுக்கு சர்வதேச சமூகம், உள்ளிட்ட அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய, தீர்வொன்றை செயற்படுத்த வேண்டிய உயர்ந்த எண்ணத்துடன் இந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கிறது. இதுவரையில் இந்தச் சாதனையை எவரும் ஏற்படுத்தவில்லை.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை அரசாங்கம் மீள்குடியேற்றிவிட்ட போதிலும் அப்பிரதேசங்களில் மனித வளங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பணியை மாகாண சபைகளும், உள்ளூராட்சி மன்றங்களும் செய்து வருகின்றன. வடபகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை வலுவூட்ட வேண்டியுள்ளது என்றும் தெரிவித்தார்.

# புனரமைக்கப்பட்ட வீடுகள் களுவாஞ்சிக்குடியில் கையளிப்பு



(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சூறையடி - சூரியபுரம் கிராமத்தில் மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட 44 வீடுகள் நேற்று முன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப் பட்டன. மீள்குடியயேற்ற அமைச்சர் குணவர்த்தன வீரகோன் மற்றும் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் இந்த வீடுகளை திறந்து வைத்து மக்களிடம் கையளித்தனர்.

இந்த வைபவத்தில் மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர் எஸ்.பந்துசேன மற்றும் உதவிச் செயலாளர் திருமதி வை.தவஈஸ்வரி, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், மீள்குடியேற்ற அமைச்சின் இணைப்பாளரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் பிரிவு தலைவியுமான திருமதி ருத்மலர் ஞானபாஸ்கரன், மீள்குடியேற்ற பிரதியமைச்சரின் இணைப்புச் செயலாளர் பொன். ரவீந்திரன் உட்பட அமைச்சின் அதிகாரிகள் மற்றும் முக்கியஸ்தர்கள, கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மண்வெட்டியால் தாக்கி மகனைக் கொன்றார் தந்தை


## கம்பி எண்ணுகிறார் இப்போது

(கொழும்பு)

மண்வெட்டியால் தாக்கி தனது மகனைக் கொலை செய்ததாக நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்ட ஹொரவப்பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்த தந்தை ஒருவருக்கு 13 வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணை அநுராதபுரம் மேல் நீதிமன்றில் நேற்று நடைபெற்றது. சந்தேகநபருக்கு சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக 50 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அவ்வாறு அபராதத் தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் மூன்று மாதகால சிறைத் தண்டனை விதிக்கபட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி இடம்பெற்ற இந்த குற்றச்செயல் தொடர்பாக அதே வருடம் மார்ச் 26ஆம் திகதி சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



**இவ்வருடம் 40 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் தேசிய சேமிப்பு வங்கியின், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்தனர். இதன்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் பிரதீப் காரியவசம் நினைவுச்சின்னமொன்றை கையளித்தார். பிரதி நிதியமைச்சர் கீதாஞ்சன குணவர்தன, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.**


# இந்திய நாடாளுமன்றக் குழு இலங்கை வருகை

இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் தொடர்பாக தமிழ்நாட்டின் கரிசனைகள் அதிகரித்து வரும் நிலையில் இந்திய நாடாளுமன்றத் தூதுக் குழு வொன்று இலங்கைக்கு வரவுள்ளது.

இலங்கை நிலைவரத்தை நேரில் பார்வையிடுவதற்காக இந்திய நாடாளுமன்றத் தூதுக்குழுவினர் விரைவில் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் எனினும், இதற்கான திகதிகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகரா்லய வட்டாரங்கள் தெரிவித்தன. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிந்தவுடன் தி.மு.க.வின ரி.ஆர்.பாலு தலைமையில் 10 பேர் கொண்ட இந்திய நாடாளு மன்றத் தூதுக்குழு இலங்கைக்கு விஜயம் செய்தமை குறிப்பிடத் தக்கது.

# இந்திய வீடமைப்பில் பாரபட்சம் வேண்டாம் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களுக்கும் வீடு வேண்டும்

## முஸ்லிம் எம்.பி.கள் கூட்டாகக் கோரிக்கை



(கொழும்பு)

யுத்தத்தினால் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்காக இந்திய அரசங்கத்தினால் வழங்கப்படவுள்ள வீடமைப்பு திட்டத்தில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களையும் உள்வாங்குமாறு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 17 முஸ்லிம் நாடாளுமன்ற உறுபபினர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே. காந்தாவிற்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 17 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கடித்தில் சிரேஷட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, அமைச்சர்களான றிசாட் பதியுதீன், ரஊப் ஹக்கீம், ஏ.எல்.எம். அதாவுல்லா, பிரதியமைச்சர்களான அப்துல் காதர்,. எம்எல் ஏ.எம் ஹிஸ்புல்லா, பீஷ்ர் சேகுதாவுத் , பைஸர் முஸ்தபா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ரி. ஹசன் அலி, ஏ.எச. எம் அஸ்வர், பைசால் காசீம, எச். எம். எம்.ஹரீஸ், "ஹனைஸ் பாரூக், எம்.எஸ். தௌபீக், கபீர் ஹாசிம, எம். எஸ்.அஸ்லம் மற்றும் எம்.பி. பாருக் ஆகியோரே கையொப்பமிட்டுள்ளனர்.

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் அனைத்து மனிதாபிமான உதவிகளிலும் பழைய மற்றும் புதிய உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் என பாரபட்சம் காட்டாமல் வழங்குமாறும் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கிலிருந்து இன ரீதியாக வெளியேற்றப்பட்ட மக்களை 2008 பின்னர் மீள்குடியேறியவர்களில் உள்வாங்குமாறும் அல்லது வீடமைப்பு திட்டத்திற்காக தெரிவு செய்யும் 20 புள்ளிக்குள் இணைக்குமாறும் குறித்த கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், வடக்கில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மனித உரிமை நிறுவனங்கள் கவனத்திற் கொள்ளவில்லை. அத்துடன் உள்நாட்டில் இடம்பெயர்ந்த புதியவர்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்த பழையவர்கள் என ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் பிரித்து பாரபட்சம் காட்டுகின்றது. இதனால் மீளக்குடியேறும் முஸ்லிம்களுக்கு எந்தவித உதவிகளும் கிடைக்கப்பெறுவதில்லை என்பதும் குறித்த கடிதத்தில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# முஸ்லிம் உலமாக்களும் ஜெனிவாவுக்கு; அரசு புதிய வியூகம் அமைக்கிறது

(கொழும்பு)



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரேரணையில் இலங்கைக்கு சார்பாக முஸ்லிம் நாடுகளின் ஆதரவினைத் திரட்டுவதற்காக பிரபல்யம் வாய்ந்த இரண்டு முஸலிம் உலமாக்களை அரசாங்கம் ஜெனிவாவுக்கு அனுப்பவுளளது என அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய் றிஸ்வி முப்தி மற்றும் பிரதி தலைவர் அஷ்ஷெய் ஏ.சீ.அகார் முஹம்மத் ஆகியோரே ஜெனிவா செல்லவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இவர்கள் இருவரும் தன்னுடன் ஜெனிவா பயணமாக உள்ளதாக அமைச்சர் றிசாட் தெரிவித்தார்.

இந்த உலமாக்கள் இருவருடனும் இணைந்து முஸ்லிம் நாடுகளின் பிரதிநிதிகளைச் ச்ந்திக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளினால் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தொடர்பிலும், தற்போது ஏனைய இனங்களுடன் ஒற்றுமையாக வாழ்வது குறித்தும் நாடுகளுக்கு விளக்கவுள்ளதாக அவர் கூறினார். குறித்த பிரேரணையை தோற்கடிப்பதற்கு ஆதரவு வழங்குமாறு இஸ்லாமிய நாடுகளின் தலைவர்களுக்கு கடிதம் எழு தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் றிசாட் பதியுதீனுடன் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் ஜெனிவா செல்லவுள்ளனர்.

இதேவேளை, அமைச்சர் ஹக்கீம் ஏற்கனவே ஜெனிவாவில் தங்கியுள்ள நிலையில், இலங்கை தூதுக்குழுவினருக்கு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமை தாங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



# முன்னாள் புலிகளுக்கு தெற்கில் காணிகள் வழங்க அரசாங்கம் தயாராக உள்ளது

(கொழும்பு)

**புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு தெற்கில் வாழ்வதற்குக் காணிகள் வழங்கவும் தயார் எனத் தெரிவித்த பிரதமர் டி.எம்.ஜயரத்ன அதற்கு விருப்பமுடைய பயிலுநர்கள் இருப்பின் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்குமாறு கேட்டுக்கொண்டார். கம்பளை, அம்புலுவாவ உயிர் பல்வகைமைத் தொகுதியினைப் பார்வையிட வந்திருந்த புனர்வாழ்வளிக்கப்பட்ட புலி உறுப்பினர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.**

இந்தப் பயிலுநர்கள் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் வழிகாட்டலின் கீழ் நாட்டின் பல பிரதேசங்களுக்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டதுடன், கம்பளை, அம்புலுவாவ உயிர் பல்வகைமைத் தொகுதியினையும் பார்வையிட வருகை தந்தனர். புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவுடன் வருகை தந்திருந்த அனைவரையும் பிரதமர் கோலாகலமாக வரவேற்றார்.

அம்புலுவாவ உயிர் பல்வகைமைத் தொகுதி வளாகத்தில் அமைந்துள்ள சர்வதேச கருத்தரங்கு மண்டபத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது பிதமர் கருத்துத் தெரிவிக்கையில், பலமிக்க நாடுகள் சிலவற்றினதும் உள்நாட்டில் இயங்கும் சில இனவாதக் குழுக்களினதும் குறுகிய நோக்கங்களுக்காக வடக்கின் இளைஞர், யுவதிகள் யுத்தத்திற்குள் தள்ளப்பட்டனர். இந்த உண்மையினை விளங்கிக் கொள்வதற்கு அவர்களுக்கு நீண்ட காலம் எடுத்தது. வடக்கின் அநேக இளைஞர், யுவதிகள் தமது தனிப்பட்ட தேவைகளுக்காக யுத்தத்தில் பங்கேற்கவில்லை. நீங்கள் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களாகவும், பல்வேறு அரசியல் நோக்கங்களையும் பல்வேறு இலட்சியங்களுடனும் வாழ்ந்திருக்கக்கூடும். ஆனாலும், சில அரசியல் நோக்கங்கள் உங்களது உள்ளத்தில் ஆழப்பதிந்ததன் காரணமாக பிழையான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியேற்பட்டதனை நாம் நன்கறிவோம். புனர்வாழ்வு பெற்றதன் பின்னர் நீங்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களாக வாழ்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

## ௩0பேர் கடத்தல் தீவயின தகவல்

(கொழும்பு)

இலங்கையில் அண்மைக் காலங்களில் 30 பேர் கடத்திச் செல்லப்பட்டதாகவும் இதில் 10 பேரின் சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்தாகவும் தெரிவித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கடந்த 12 ஆம் திகதி மதியம் 15 பக்கங்களைக்கொண்ட மகஜர் ஒன்றை ஜெனிவா மனித உரிமை பேரவைக்கு அனுப்பியுள்ளதாக திவயின தெரிவித்துள்ளது.

சம்பந்தனின் இந்தக்குற்றச்சாட்டுகள் முற்றிலும் பொய்யானது என சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அதோபோல், இந்தத் தகவல்களை அனுப்பியுள்ள சம்பந்தன், இலங்கை தொர்டர்பில் சர்வதேச தலையீட்டை மேற்கொள்ளுமாறு மனித உரிமை பேரவையிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



துனுக்காய் பிரதேசத்தில் மீளக்குடியேறிய பொதுமக்களுக்காக இராணுவத்தினரால் வழங்கப்படும் உதவித் திட்டங்கள் குறித்து மேற்பார்வை செய்வதற்காக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை விஜயம் செய்தார். துனுக்காய் பிரதேசத்தில் அமைந்துள்ள 69ஆவது காலாட்படை முகாமில் இராணுவத் தளபதி வரவேற்கப்படுவதையும், அங்கு இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அணிவகுப்பு மரியாதையினை அவர் ஏற்றுக்கொள்வதையும் காணலாம்.

## மருதங்கேணியிலிருந்து தெற்கு மீனவர்களை உடனடியாக வெளியேறுமாறு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் அனுமதி இன்றித் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த தென்பகுதியைச் சேர்ந்த மீனவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு கடற்றொழில் திணைக்களம் உத்தரவிட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் ஹெட்டியாராட்சி, கட்டைக்காடு இராணுவ அதிகாரி மற்றும் தம்மூடாகவும் இந்த உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் தென்னிலங்கையைச் சேர்ந்த 11 மீனவர்கள் அனுமதியின்றித் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர். இவ்விடயம் குறித்து அந்தப் பகுதி மீனவர்களும் கடற்றொழில் சங்கங்கள் மூலம் தமக்குப் புகார் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும், இதன் அடிப்படையில் நேற்றுமுன்தினம் குறித்த பகுதிக்கு தாம் விஜயம் செய்து அப்பகுதி கடற்றொழில் சங்கங்களுடன் கலந்துரையாடி உண்மை நிலையை கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர்களுக்கு அறிவித்ததாகவும், இதன் அடிப்படையில் கிராமிய கடற்றொழில் சங்கங்களின் அனுமதி இன்றி எவரும் தொழில் செய்ய முடியாது எனவும், அவ்வாறு தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் குறித்த மீனவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு பணிக்கப்பட்டிருக்கிறது எனவும் தெரிவித்துள்ளார். (பா)

## பால் உற்பத்தி நிலையத்துக்கு புதிய கட்டடம் அமைப்பு

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பாற பொருள் உற்பத்தி நிலையத்துக்கென புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

மேற்படி சங்கத்திற்கு யாழ். மாவட்ட மீள்எழுச்சித் திட்டத்தின் கீழ் 30 இலட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான காணி கரணவாய் கிழக்கு நாவலர் மடத்தில் சங்க நிதியில் இருந்து கொளவனவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கட்டடத்திற்கென 20 இலட்சம் ரூபாவும் தளபாட உபகரணங்களுக்கென 10 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்துக்கான வேலைகள் இந்த வருட நடுப்பகுதியில் முடிவுற்று செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் பால் உற்பத்தி நிலையத்தில் தயிர், பால், யூஸ், நெய் போன்ற பால் உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யப்படும் என வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் நா.மகேந்திரம் தெரிவித்துள்ளார். (116)

## ஆவரங்காலில் விபத்து; குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில் உள்ள ஆவரங்கால் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 8 மணிக்கு இடம்பெற்றுள்ளது. பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து பயணிகளை இறங்கிக் கொண்டிருந்த சமயம் பின்னால் உந்துருளியில் வந்த நபர் அந்தப் பேருந்துடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் புத்தூர் மேற்கைச் சேர்ந்த இராசையா ரவீந்திரன் (வயது-42) என்பவரே படுகாயமடைந்தவராவர்.

குறித்த நபர் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் இந்தப் விபத்து ஏற்பட்டுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தீவகத்தில் சட்டவிரோத மணல் அகழ்வுக்குத் தடை; மணல் தேவையானால் பிரதேச சபைக்கு விண்ணப்பிக்கவும்

(வேலணை)

வேலணைப் பிரதேச சபையினது நிர்வாக எல்லைக்குட்பட்ட நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய இடங்களில் இருந்து மணல் அல்லது ஊரிமண் போன்றவை பிரதேச சபையினது உத்தரவுப் பத்திரமின்றி அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து எடுத்துச் செல்ல அனுமதிக்க முடியாதென வேலணைப் பிரதேச சபையினது தவிசாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார்.

அதேநேரத்தில் மணல் அல்லது ஊரிமண் தேவையானவர்கள் தங்களினது தேவைகள் குறித்த விண்ணப்பங்களைத் தயாரித்து தங்கள் தங்கள் பகுதிக் கிராம சேவை அலுவலரினது அனுமதியுடன் பிரதேச சபைக்கு விண்ணப்பிப்பதன் மூலமாகத் தலைவர் அல்லது செயலாளரினது சிபாரிசுடன் அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05,85)

## மீண்டும் சிறைவாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறையில் இருந்து கடந்த வருடம் மே மாதம் 4ஆம் திகதி தப்பியோடிய கைதி இவ்வருடம் தைமாதம் 11ஆம் திகதி மீண்டும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். குறித்த வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா 9 மாத கால சாதாரண சிறைத் தண்டனையை வழங்கி தீர்ப்பளித்தார். இதேபோல் கடந்த வருடம் மார்ச் மாதம் 31ஆம் திகதி சிறைச்சாலை கூரையைப் பிடித்துத் தப்பியோடிய மற்றொரு கைதிக்கு 6 மாத கால சாதாரண சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். (எஸ்)

## பாலியல் துஷ்பிரயோகம்; தந்தைக்கு கடூழிய சிறை

(கொழும்பு)

பதினேழு வயது தனது மகளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக நீதிமன்றத்தால் குற்றவாளியாக காணப்பட்ட தந்தை ஒருவருக்கு 17 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு வடமத்திய மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி சுனந்த குமார ரத்னாயக்க முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரொக்கமாக இரண்டு இலட்சம் ரூபாவை செலுத்துமாறும் பிரதிவாதியான தந்தைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதுதவிர 50 ஆயிரம் ரூபா அபராதத் தொகையையும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. கல்கிரியாகம பகுதியைச் சேர்ந்த ஒருவரே நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார்.

## பூரணமற்ற வீதி திருத்தம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு- நாகர் கோயில் மேற்குப் பகுதி கவுத்தம் துறை பிள்ளையார் கோயில் வீதியானது பருத்தித்துறைப் பிரதேச சபைக்குச் சொந்தமானது. இது முற்றுமுழுதாகப் புனரமைக்கப்படாமல் உள்ளது.

இடைநடுவில் ஒரு கிலோ மீற்றர் தூரமான வீதி திருத்தம் செய்யப்படாமல் விடப்பட்டுள்ளது. இவ்வீதியானது ஆலயத்தின் ஊடாக கடற்கரை செல்லும் வீதியாகும். இவ்வீதி பள்ளமும் மேடாகவும் காட்சியளிக்கிறது.

கடந்த 2011 ஆம் ஆண்டு நாகர் கோவில் மேற்குப் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின் கவுத்தம் துறைப் பிளளையார் கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு வருவதுடன், இவ்வாலயத்துக்கான கட்டுமானப் பணிகளும் அப்பகுதி வாழ் மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (116)

# சிறுகைத் தொழிலாளர்களுக்கு மூலப் பொருட்கள் விநியோகம்

## அமைச்சரவைப் பத்திரம் விரைவில்



(கொழும்பு)

சிறு கைத்தொழிலாளர்களது நலன்கருதி அவர்களுக்குத் தேவையான மூலப்பொருளான ஈயத்தை இலகுவாகப் பெறக்கூடிய வகையிலான செயற்பாட்டினை சட்டரீதியாக முன்னெடுக்கும் நோக்கில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

சிறுகைத் தொழிலாளர்களில் பலர் அறியாமை காரணமாக இதுவரையில் தவறான வழிகளில் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையிலேயே மூலப்பொருளாக ஈயத்தைப் பயன்படுத்தி வந்துள்ளனர். அதே நேரம் அவர்களது உற்பத்திகளின் தேவைக்கேற்ப ஈயத்தினை மூலப்பொருளாகப் பெறமுடியாத நிலையும் இருந்து வந்துள்ளது.

எனவே இந்நிலையை மாற்றி சட்டரீதியிலான வகையிலும் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் மேற்படி ஈய விநியோகத்தை மேற்கொள்ளும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையின் பிரகாரம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சும் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வணிக அமைச்சும் இணைந்து அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளது.

இதுவரையில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் ஈயம் அடங்கிய வாகன பற்றரிகள் அரச நிறுவனங்களில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு அவை சிறுகைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன. இந்தப் பற்றரிகளைக் கொள்வனவு செய்கின்ற கைத்தொழிலாளர்கள் தங்களது தொழில் நிலையங்களில் வைத்து அவற்றை உருக்குவதால் பாரியளவில் சூழல் மாசுற்றுவரும் நிலையில் இதனைத் தவிர்ப்பதற்கும் சிறுகைத் தொழிலாளர்களது தேவைகேற்ப, நியாய விலையில் ஈயத்தை மூலப்பொருளாக வழங்குவதற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இந்நடவடிக்கை மூலம் வழிவகுக்கிறது.

இதன்படி இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மூலம் அரச நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்படுகின்ற பற்றரிகளை இலங்கை முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்ட ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதென்றும் இந்தத் தனியார் நிறுவனமும் ஏனைய பற்றரிகளைச் சேகரிக்கும் பணியில் ஈடுபடும் என்றும் இவ்வாறு சேகரிக்கப்படும் பற்றரிகள் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இத்தனியார் நிறுவனத்தின் மூலம் உருக்கப்பட்டு சிறுகைத் தொழிலாளர்களுக்குத் தேவையானளவு ஈயத்தை நியாய விலையில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை வழங்குமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிறுகைத் தொழிலாளர்களது தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு எஞ்சும் ஈயத் தொகையை மேற்படி தனியார் நிறுவனத்தின் மூலம் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் பிரகாரம் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள கைத்தொழிலாளர்களுக்கு மட்டும் இச்சபை நியாய விலையில் தேவைக்கேற்ப ஈயத்தை மூலப்பொருளாக வழங்கும்.

அதேநேரம் இலங்கையில் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் சட்டவிரோதமாக ஈயத்தை உருக்கும் நபர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை எடுக்கவும் இதன் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மனித உரிமைப் பேரவையில் விமலுக்கு எதிராக முறைப்பாடு

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய தரப்பினர் கத்தோலிக்க மதகுரு ஒருவருக்கு மிரட்டல் விடுத்துள்ளதாக போர்ட் ஏசிய என்ற அரச சார்பற்ற நிறுவனம் மனித உரிமைப் பேரவையில் முறைப்பாடு செய்துள்ளது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாகத் தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் விமர்சனங்களை முன்வைத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# பொன்சேகாவின் மெய்க்காவலர்களை சவேந்திரசில்வா மீள அழைத்தார்

## நீதிமன்றில் இராணுவ அதிகாரி சாட்சியம்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த வீரர்களை மீள அழைப்பதற்கு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, தொலைபேசி மூலம் தனக்கு கட்டளையிட்டதாக இராணுவத்தின் ஒழுக்காற்று அதிகாரி பிரிகேடியர் அசோக் வீரசிங் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார்.

சரத் பொன்சேகா மற்றும் அவரின் செயலாளராகக் கடமையாற்றிய முன்னாள் இராணுவக் கப்டன் சேனக ஹரிபிரிய டி சில்வா ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பின் குறுக்குக் கேள்விகளுக்குப் பதிலளித்த பிரிகேடியர் அசோக் வீரசிங்க, மீள அழைக்கப்பட்டமைக்கான கட்டளையை புறக்கணித்த வீரர்கள், சேவையை விட்டுச சென்றவர்களாகக் கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற கடிதமொன்றும் தனக்கு கிடைத்ததாக நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பு எதுவும் காணப்படவில்லை எனவும், அது இராணுவத் தலைமையகத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதமா என்பது குறித்து தான் அறிந்திருக்கவில்லை என்றும் பிரிகேடியர் தெரிவித்தார். இந்த வழக்குத் தொடர்பான விசாரணை ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

இராணுவ வீரர்களின் அரச விசுவாசத்தை சீர்குலைப்பதற்கும், இராணுவக் கட்டளைகளுக்கு அடிபணிவ்தை தடுப்பதற்குமான சூழ்ச்சியில் ஈடுபட்டதாக சரத் பொன்சேகா மற்றும் அவரின் செயலாளர் ஆகியோருக்கு எதிராக இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# அரைமானிய அடிப்படையில் தூவல் நீர்ப்பாசனக் கருவிகள்

(முழங்காவில்)

அரைப்பங்கு மானியத்திட்டத்தின் அடிப்படையில் பூநகரிப்பகுதியில் ஆறு மேட்டு நிலப்பயிர்ச் செய்கையாளருக்கு தூவல் நீர்ப்பாசனக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த போகத்தில் வெங்காயச்செய்கையில் ஈடுபட்டு உச்சக்கட்ட விளைச்சலைப் பெற்றுக் கொண்டதாக பூநகரிப்பகுதி விவசாயப் போதனாசிரியர் பூநகரி கமநலசேவைநிலைய உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார். மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், விலைமானியத்தோடு 15360 ரூபாவைச் செலுத்த வேண்டும். புதிய திட்டத்தில் பலரை இணைத்துக் கொள்ள விருப்பதால் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார். (112)

# இலங்கையில் இன நல்லிணக்கம்; கனேடிய எம்.பி. களுக்கு விளக்கம்

(கொழும்பு)

இலங்கையில் இனங்களுக்கு இடையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைள் குறித்து கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்க ளுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் சித்ரங்கனி வாகீஸ்வரா, அங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து இவ்விடயம் குறித்துப் பேசியுள்ளார்.

இலங்கையின் தற்போதை அரசியல் நிலைமைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில், அவரால் விளக்கமளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பிலும் அவர் எடுத்துரைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# வேலணையின் வெற்றிகரமான அபிவிருத்திக்கு தீவக அபிவிருத்திக் குழு அமைக்க ஏற்பாடு

(வேலணை)

வேலணைப் பிரதேசத்தின் எதிர்கால அபிவிருத்தியை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக தீவக அபிவிருத்திக் குழு உருவாக்கப்படவுள்ளது.

தீவகத்தைச் சேர்ந்த கல்விமான்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், பேராசிரியர்கள் மற்றும் பலதுறை சார்ந்த அறிவாளர்கள் ஆகியோர்களை ஒன்று திரட்டி இந்தத் தீவக அபிவிருத்திக்குழு ஒன்றினை அமைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை வேலணைப் பிரதேச சபையினது தவிசாளர் மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறு அபிவிருத்திக் குழுவொன்றினை அமைத்துக்கொள்வதன் மூலம் தீவகத்தின் பல பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய மிக முக்கியமான வேலைத் திட்டங்களை இவர்கள் மூலமாக அடையாளம் கண்டு அந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு ஒவ்வொரு இடத்திலிருந்தும் தெரிவு செய்யப்படுகின்ற இக்குழுவின் பிரதிநிதிகள் தங்களினது பகுதிகளில் செய்யப்பட வேண்டிய செயற்திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறுவார்கள்.

அதன்படி வேலைகள் மேற்கொண்டு தீவகத்தின் அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு ஆலோசித்து வருவதாக தவிசாளர் கருத்துத் தெரிவித்தார். (05)

# வாதரவத்தை மக்களுக்கு குடிநீர்; பவுசர் மூலம் வழங்க நடவடிக்கை

(புத்தூர்)

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட வாதரவத்தைப் பகுதிக்குட்பட்ட குடிநீர் வழங்கல் தடைப்பட்டுள்ளதால் மக்கள் குடிநீர்பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வாதரவத்தைப் பகுதி உவர் நீர் உள்ள பகுதியாக இருப்பதானால் இந்தப் பகுதிக்கு நிலாவரைக் கிணற்றிலிருந்து நீர்வடிகால் அமைப்புச் சபையினரால் குழாய் வழியாக நீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. கடந்த சில நாட்களாக நீர் வழங்கும் குழாய்களில பழுது ஏற்பட்டுள்ளதால் அங்குள்ள மக்கள் குடிநீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளன.

இந்தப் பிரச்சினை தொடர்பாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ள நிலையில் குறித்த கிராமத்துக்கு நீர்விநியோகம் சீராகும் வரை பவுசர்கள் மூலம் நீரை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(02)

# அமெரிக்கத் தீர்மானம் குறித்து அவரச முடிவெடுக்க முடியாது

## இப்படிக் கூறுகிறார் கருணாநிதி

(சென்னை)

இலங்கை மீதான அமெரிக்க தீர்மானம் குறித்த பிரச்சினையில், மத்திய அரசுக்கு கொடுத்துவரும் ஆதரவை விலக்கிக் கொள்ளும் விடயத்தில், அவசரப்பட்டு முடிவெடுக்க முடியாது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறினார்.

சங்கரன்கோவில் இடைத் தேர்தல் பிரசாரத்தை முடித்துக் கொண்டு, மதுரையில் இருந்து சென்னை வந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி, விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்திற்கு, இந்தியா ஆதரவு தெரிவிக்காவிட்டால் மத்திய அரசுக்கு தி.மு.க. கொடுத்து வரும் ஆதரவை விலக்கிக் கொள்வீர்களா? என்று செய்தியாளர்கள் கேள்விகளைத் தொடுத்தனர்.

இதே கேள்வியை இரண்டு தினங்களுக்கு முன் கேட்டீர்கள். அப்போதே, தி.மு.க. செயற்குழு கூடி இது குறித்து முடிவெடுக்கும் என்று கூறினேன். மீண்டும் இன்றைக்கு அதே கேள்வியைக் கேட்கிறீர்கள். நீங்கள் அவசரமாகக் கேட்கும் இந்தக் கேள்விக்கு, நான் அவசரமாகப் பதில் சொல்ல முடியாது. இது கொள்கை ரீதியான விடயம். இதில் நான் தனிப்பட்ட முறையில் முடிவெடுக்க முடியாது. செயற குழு முடிவெடுக்கும். இவ்வாறு கருணாநிதி பதிலளித்தார்.

# பெண்கள் உதைபந்தாட்ட போட்டி; இறுதிப் போட்டிக்கு இளஞ்சுடர் முன்னேற்றம்

(வடமராட்சி)

வலிவடக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டியில் இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக்கழக பெண்கள் அணியினர் தம்மை எதிர்த்தாடிய சென்.ஹூட்ஸ் விளையாட்டுக்கழக பெண்கள் அணியினரை 3:2 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்குத்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அரையிறுதிப் போட்டி கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சென்.ஹூட்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. ஒரே கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கழகங்கள் இரண்டும் மோதிக் கொண்டதால் மைதானம் பார்வையாளர்களால் நிரம்பிக் காணப்பட்டது.

பார்வையாளர்களின் ஆக்ரோஷமான ஆதரவுக்கும் ஆரவாரிப்புக்கும் இடையில் இரு கழக வீராங்கனைகளும் ஆவேசத்துடன் மோதிக்கொண்டனர். இரு அணியினரும் ஆட்டம் முடிவடையும் நேரம் வரை பல தடவைகள் கோல் போட முயன்றபோதும் இரு கழக கோல் காப்பாளர்களும் திறம்பட விளையாடியதால் இரு அணியினராலும் கோல் எதனையும் போடமுடியவில்லை. வெற்றிதோல் வியைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட தண்டன உதைமூலம் இளஞ்சுடர் விளையாட்டுக்கழகம் 3:2 என்ற அடிபபடையில் வெற்றியைத் தன தாக்கிக்கொண்டது.

# துணுக்காய் கல்வி வலய மெய்வல்லுநர் போட்டிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட துணுக்காய் கல்வி வலயத்தின் மெய்வல்லுநர் போட்டிகள் நாளை முதல் 21 ஆம் திகதி புதன் கிழமை வரை மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய கோட்டங்களில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களினைப்பெற்ற பாடசாலைகளின மாணவ மாணவிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (42)

# துணுக்காய் வலய உதைபந்தாட்டம் கற்சிலைமடு முதன்மை நிலை

(முல்லைத்தீவு)

துணுக்காய் கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளிடையே நடைபெற்று முடிவடைந்துள்ள பெரு விளையாட்டுக்களில் உதைபந்தாட்டப் போட்டிகளில் மு/கற்சிலை மடு அ.த.க. பாடசாலை இரண்டு போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்று முதன்மை நிலையைப் பெற்றுக்கொண்டது.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்துடனான இறுதிப் போட்டியில் 2:0 என்ற கோல கணக்கில் வெற்றி பெற்று முதலாம் இடத்தை கற்சிலை மடு அ.த.க. பாடசாலை பெற்றுக்கொண்டது.

அதேபோல் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான இறுதிப்போட்டியில் கற்சிலைமடு அ.த.க.பாடசாலையும், பாலிநகர் அ.த.க பாடசாலையும் மோதிக் கொண்டன. இரு பாடசாலைகளும் போடடி நேரத்தின்போது எந்தவித கோல்களினையும் பெறாமையால் தண்ட உதைகள் மூலம் முடிவு தீர்மானிக்கப்பட்ட போது 3:2 என்ற கணக்கில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை வெற்றி பெற்று முதலாம இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இதேநேரம் 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் மல்லாவி மத்திய கல்லூரியும் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

இந்தப் போட்டியில் 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று மல்லாவி மத்திய கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இந்தப்போட்டிகள் மல்லாவி மத்திய கல்லூரி யோகபுரம் மகா வித்தியாலயம் ஆகிய இரு மைதானங்களிலும் இடம் பெற்றது. (42)

# கொற்றாவத்தை சிவானந்தா வெற்றி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை லீக் அனுசரணையில் நடபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கொற்றாவத்தை சிவானந்தா 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் கொற்றாவத்தை சிவானந்தா உதைபந்தாட்ட அணி கரவெட்டி நவக்கிரி உதைபந்தாட்ட அணியை எதிர்த்து மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் போட்டி ஆரம்பித்து 15 ஆவது நிமிடத்தில் கொற்றாவத்தை சிவானந்தா உதைபந்தாட்ட அணியின் வீரர் ஆர் இலங்கேஸ்வரன் முதலாவது கோலையும் இறுதி 85 ஆவது நிமிடத்தில் ரி.பிரதீப் இரண்டாவது கோலையும் போட்டு தமது அணியின் வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

இந்தப்போட்டியில் பிரதம நடுவராக வி.முகுந்தனும், உதவி நடுவர்களாக எஸ்.கதிர்காமநாதன் மற்றும் எஸ் சுரேஸ் கடமையாற்றினார்கள். (எஸ்)

# நூறாவது சதம் பற்றி கேட்டது உளரீதியாகப் பாதித்தது - சச்சின்



நூறாவது சதம் பெற்றது குறித்து அதிகம் நினைக்கவில்லை, எனது சதம் தொடர்பாக சகலரும் என்னிடம் கேட்டனர், உண்மையில் அது என்னை உளரீதியாகப் பாதித்தது என சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார். பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் இந்திய அணியின் இனிங்ஸ் முடிவுக்கு வந்தபோது கருத்து வெளியிட்ட அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், உண்மையில் இது குறித்து (நூறாவது சதம் பெற்றது) நான் அதிகம் நினைக்கவில்லை, ஏனெனில் ஓராண்டுக்கு முன்னர் நான் எனது 99ஆவது சதத்தை பெற்ற பின்னர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் போது எவரும் அது தொடர்பில் பேசவில்லை. அதன் பிறகு ஊடகங்கள்தான் இது குறித்து முதலாவதாக பேச ஆரம்பித்தன. ஆகவே நான் செல்லும் இடமெல்லாம் எனது சதம் தொடர்பாகவே சகலரும் என்னிடம் கேட்டனர்.

உண்மையில் அது என்னை உளரீதியாகப் பாதித்தது. நான் நாட்டுக்காகவே விளையாடுகிறேன் எனது நூறாவது சதத்திற்காக மாத்திரம் விளையாடவில்லை. 99 சதங்களுக்கு பின்னர் பேசாத சகலரும் ஏன் நூறாவது சதம் குறித்து மாத்திரம் பேசுகின்றனர். எனினும் வீரர் என்ற வகையில் அணியின் நலனையே கருத்திற் கொள்வேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மருதங்கேணி கோட்ட மட்ட போட்டி முடிவுகள்

மருதங்கேணி கோட்ட மட்டப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் விபரங்கள் வருமாறு:

**75 மீற்றர் ஓட்டம் 11 வயது ஆண்கள்**

முதலாமிடம் - டே.மரியசெல்வம் யா/மணற்காடு றோ.க.த. பாடசாலை, இரண்டாமிடம் - செ.சாரஙகன் யா/அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை, மூன்றாமிடம் - ஜி.ஞானநியூட்டன் குடத்தனை றோ.க. த.க பாடசாலை

**நீளம் பாய்தல்**

**11 வயதுஆண்கள்**

முதலாமிடம் - வி.வின்சுடர் மருதங்கேணி எச்.ரி.எம் பாடசாலை, இரண்டாமிடம் - ஜே.ஜெயதீஸ் யா/ஆழியவளை சி.சி.ரி.எம். பாடசாலை, மூன்றாமிடம் - ஜே.கஜந்தன் மருதங்கேணி எச்.ரி.எம் பாடசாலை.

**உயரம் பாய்தல்**

**11 வயதுஆண்கள்**

முதலாமிடம் - செ.சாரங்கன் அம்பன் அமெரிக்கமிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, இரண்டாமிடம் - ர.ரதீஸ்குமார் ஆழியவளை சி.சி.ரி.எம். பாடசாலை, மூன்றாமிடம் - ம.றீகன் குடத்தனை அ.த.க. பாடசாலை.

**10 மீற்றர் ஓட்டம்**

**11 வயது ஆண்கள**

முதலாமிடம் - டே.மரியசெல்வம் யா/மணற்காடு றோ.க.த. பாடசாலை, இரண்டாமிடம் - ஜி.ஞானநியூட்டன் குடத்தனை றோ.க. த.க பாடசாலை, மூன்றாமிடம் - ர. ரதுசன் உடுத்துறை மகா வித்தியாலயம்.(116) *(தொடரும்)*


# 64 ஓட்டங்களால் அவுஸ்ரேலியா வெற்றி

மேற்கிந்தியத்தீவு அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 64 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வோர்னார் 40, பைலியா 48 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் பிராவோ





மூன்று, ரோச் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 205 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 32.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழ்ந்து 140 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சாமுவேல்ஸ், டரன் சமி தலா 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டோக் ஹிரையா நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்ட. நாயகனாக பைலியா தெரிவானார்.

# தென்னாபிரிக்க அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி


(ஹமில்டன்)

நியூசிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று ஹமில்டன் மைதானத்தில் நிறைவடைந்தது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி 185 ஓட்டங்களையும், தென்னாபிரிக்கா அணி 253 ஓட்டங்களையும் பெற்றனர்.

68 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வில்லியம்ஸன் 77 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிண்டர் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.





100 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய தென்னாபிரிக்க அணி ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அணித் தலைவர் ஆட்டமிழக்காது ஸ்மித் 55, அம்லா 46 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதன் மூலம் இப்போட்டியில் ஒன்பது விக்கெட்டுக்களால் தென்னா பிரிக்க அணி வெற்றிபெற்றது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக இரு இனிங்ஸிலும் 10 விக்கெட்டுக்களை வீழ்த்திய பிண்டர் தெரிவானார்.

மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி முன்னிலை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடுமையான முடிவுகளை எடுக்கும்போது கூட்டணிக் கட்சிகளுடன் ஆராய்வோம்

(புதுடில்லி)


முக்கியமான விடயங்களில், கடினமான முடிவுகளை எடுக்கும்போது, கூட்டணிக் கட்சிகளிடம் கலந்தாலோசிப்போம். அதே நேரத்தில், வேகமான, நிலையான, சமமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதில், அரசு உறுதியாக உள்ளது என பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

பட்ஜெட் குறித்து, பிரதமர் மன்மோகன் சிங் அளித்த பேட்டியில் பட்ஜெட் போன்ற முக்கியமான விஷயங்களில், கூட்டணிக் கட்சிகள் விதிக்கும் நிர்ப்பந்தங்களால், சிக்கல் ஏற்படுவது உண்மைதான். ஆனாலும், வேகமான, நிலையான, சமமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதில், அரசு உறுதியாக உள்ளது. முக்கியமான விடயங்கள் குறித்து, கடினமான முடிவுகள் எடுக்கும் போதெல்லாம், அது குறித்து, கூட்டணிக் கட்சிகளிடம் கலந்தாலோசிக்கப்படும். கூட்டணிக் கட்சிகள் தெரிவிக்கும் ஆலோசனைகளையும் கருத்தில் கொண்டு செயற்படுவோம் என்றார்.



உலகம் முழுவதும், கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டாலும் கூட, இந்திய பொருளாதார வளர்ச்சியை நிலையாக வைத்திருந்தது, இந்த அரசின் முக்கியமான சாதனை. பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதில், நாம் தொடர்ந்து முன்னிலை வகிக்கிறோம். கடந்த 2008-09 இல், சர்வதேச அளவில் நிதி நெருக்கடி ஏற்பட்டபோது, நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி, 6.5 சதவீதம் என்ற வீழ்ச் சியை சந்தித்தது. கடந்த 2010-11இல், மீண்டும், 8.4 சதவீதம் என்ற வளர்ச்சியை எட்டினோம். தற்போது, மீண்டும் வளர்ச்சி விகிதம் வீழ்ச்சி அடைந்துள்ளது என்றார்.

# சங்கரன் கோவிலில் நாளை வாக்குப்பதிவு



(சென்னை)

சங்கரன் கோவில் இடைத்தேர்தலுக்கான பிரசாரம் நேற்று முன்தினம் மாலையுடன் முடிந்தது. இன்று மறுநாள் வாக்குப் பதிவு நடைபெறுகிறது.

இத்தொகுதிக்கான சட்டப் பேரவை உறுப்பினர் சொ.கருப்பசாமி கடந்த ஒக்டோபரில் மரணமடைந்ததையடுத்து இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

இதற்கான வேட்புமனுத் தாக்கல் பெப்ரவரி 22ஆம் திகதி தொடங்கி, 29ஆம் திகதி நிறைவு பெற்றது. வேட்புமனு பரிசீலனைக்குப் பின்பு, கடந்த 3ஆம் திகதி இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

களத்தில் போட்டியிடுபவர்கள்: அ.தி.மு.க, தே.மு.தி.க, தி.மு.க, ம.தி.மு.க ஆகிய முக்கிய கட்சிகளின் வேட்பாளர்கள் உட்பட மொதத்தம 13 பேர் போட்டியிடுகிறார்கள்.

# சினிமாவில் புகைபிடிக்கும் காட்சி வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(சென்னை)

சினிமாவில் நடிகர்கள் புகைபிடிக்கும் காட்சிகளுக்கு தடை விதித்து மத்திய சுகாதாரம், குடும்ப நலத்துறை கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி அறிவிப்பு வெளியிட்டது.

இந்நிலையில் இந்த அறிவிப்பிற்கு தடை விதித்தும், சட்டவிரோதமானது என்று கூறியும், டெல்லி உயர்நீதி மன்றத்தில் பிரபல பாலிவுட் அதிபர் மகேஷ் பட் வழக்கு தாக்கல் செய்தார்.


இந்த வழக்கு நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கவுல், ராஜீவ் சக்தர் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது மத்திய அரசின் அறிவிப்புக்கு இடைக்கால தடை விதிக்குமாறு மகேஷ் பட் சார்பில் வாதிடப்பட்டது.

ஆனால் சினிமாவில் புகைபிடிக்கும் காட்சிக்கு தடை விதித்து மத்திய அரசு பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதிக்க முடியாது என நீதிபதிகள் மறுத்துவிட்டனர்.

அதே நேரத்தில், இந்த வழக்கு குறித்து பதில் மனுதாக்கல் செய்ய மத்திய அரசுக்கு நோட்டீசு அனுப்ப நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

மேலும் வழக்கின் அடுத்த கட்ட விசாரணையை நீதிபதிகள் ஜூலை மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

## தவக்காலச் சிந்தனை



# தீர்ப்பிடுவதை நிறுத்துவோம்!

அப்போஸ்தலர்களில் ஒருவரான யூதாஸ் இயேசுவின் நெருங்கிய நண்பரும் கூட, ஆனால் பண ஆசை அவரை விட்டு வைக்காமல் 30 வெள்ளிக் காசுக்குக் காட்டிக் கொடுத்து மகா பாவம் செய்தார் என்பது யாவரும் அறிந்ததே.

எம் வாழ்வில் கூட நாம் மற்றவர்களைத் தீர்ப்பிடவும், காட்டிக் கொடுக்கவும் தயங்கியதில்லை. எம்மில் பிழை இருந்தாலும் நாங்கள் தப்பித்துக் கொள்வதற்கு அயலவர் மீது பழியைப் போடுகின்றோம். அது எமது உறவினர்களாய் இருந்தாலும் சரி, நண்பராய் இருந்தாலும் சரி.

காட்டிக் கொடுப்பது என்பது எவ்வளவு பெரிய துரோகத்தனம் என்பது மனிதர்கள் நமக்குத் தெரிவதில்லை. அன்று இறைமகனைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் இறுதியில் மனம் மாறி தற்கொலை செய்து உயிரை விடுகிறார். ஆனால் நாங்கள் கூட மனம்மாறி எமது பிழையை நாங்களே ஏற்று எமது பாவத்திற்கு பொறுத்தலைப் பெற்றுக்கொள்ள நாங்கள் தயங்கமாட்டோம். காரணம் இது எங்கள் வாழ்வில் ஒரு பழக்கப்பட்ட விடயம்.

ஆகவே இந்தப் பழக்கப்பட்ட விடயத்தைத் தூக்கி எறிந்து மற்றவர்களுக்குத் தீர்ப்பிடுவதை நிறுத்தி எமது பிழைகளை நாமே சரி செய்ய முன்வருவோம். அப்போதுதான் எமது வாழ்வும் இறைவனை நோக்கியதாக இருக்கும். அப்போதுதான் ஒன்றுபட்ட சமுதாயமாக இந்த உலகில் எம்மால் வாழ முடியும்.

ஆர்.மதுசன், பாசையூர்.

# ரூபா 70,000 - விலை உயரும்

(புதுடில்லி)



அடுத்த நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் உற்பத்தி வரி 10இல் இருந்து 12 சதவீதமாக உயர்த்தப்படுவதாக மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். இதனால் கார்களின் விலை ரூபா70 ஆயிரம் வரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட சர்வதேச நிதிநெருக்கடியால் அனைத்து நாடுகளின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டது. இதையடுத்து, தொழில் துறையை ஊக்குவிக்க வரிச்சலுகைகளை மத்திய அரசு அளித்தது.

இதன் பலனாக தொழில் வளர்ச்சி சீரானதால் கடந்த பட்ஜெட்டில் வரிச் சலுகைகளில் சில திரும்பப் பெறப்பட்டது. இதுபோல் இந்த பட்ஜெட்டிலும் வரிச்சலுகைகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. அதாவது 1,200 சிசிக்கு குறைவான பெட்ரோல் கார் மற்றும் 1,500 சிசிக்கு குறைவான டீசல் கார்களுக்கான உற்பத்தி வரி 10இல் இருந்து 12 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.

அதேநேரம், இதே திறனில் 4 மீற்றருக்கு கூடுதலான நீளம் கொண்ட பெரிய கார்களுக்கான உற்பத்தி வரி 22இல் இருந்து 24 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. இந்த வரி உயர்வை அப்படியே வாடிக்கையாளர்கள் மீது சுமத்தப் போவதாக கார் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# 3 நாட்கள் நகை வாங்க முடியாது

(புதுடில்லி)



மத்திய அரசு நேற்று முன்தினம் தாக்கல் செய்த பட்ஜெட்டில் தங்கம், பிளாட்டினம், வைரம், தங்கக் கட்டிகள் உள்ளிட்டவைக்கு வரியை அதிகரித்துள்ளது. இதனால் தங்க நகை வாங்குவோர் மற்றும் விற்பனை செய்வோர் கடுமையாகப் பாதிக்கப்படுவர். இதனை கண்டித்து நேற்று நாடு முழுவதும் தங்க நகைக் கடைகள் மூடப்பட்டன. 3 நாட்கள் நடக்கும் இந்த போராட்டத்தில் திருமணம் மற்றும் முக்கிய நிகழ்வுகள் கடுமையாக பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

மத்திய அமைச்சர் பிரணாப முகர்ஜி தாக்கல் செய்துள்ள பட்ஜெட்டில் தங்க நகைகள் மீது இறக்குமதிவரியாக இரண்டு முதல் நான்கு சதவீதம் அளவிற்கும் கலால் வரியாக ஒரு சதவீதமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி வரி 2 சதத்தில் இருந்து 4 சதமாக உயர்த்தப்படுகிறது. விற்பனைவரி 4 சதமாக்கப்படுகிறது. உற்பத்தி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. ரூபா 2 இலட்சத்திற்கு மேல் தங்கம் வாங்குவோர் தங்களுடைய பான் கார்டை காண்பிக்க வேண்டும் என்று புதிய உத்தரவும் போடப்பட்டுள்ளது. இதனையடுத்து நகை கடைகள் போராட்டில் குதித்துள்ளன.

# செவ்வாய்க் கிரகத்திற்கு இந்திய ரொக்கெட்

செவ்வாய் கிரகத்திற்கு ரொக்கெட் அனுப்பும் பணியை, அடுத்த வருடம் மேற்கொள்ளவுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் தாக்கல்—செய்யப்பட்ட மத்திய அரசு பட்ஜெட்டில் இஸ்ரோவின் செவ்வாய்கிரக ஆராய்ச்சிக்காக ரூபா125 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பி.எஸ்.எல்.வி. ரொக்கெட்டின் தரம் உயர்த்தப்படும். மேலும் எதிர்வரும் 2016 - 2018ஆம் ஆண்டுகளில் செவ்வாய்க் கிரகத்திற்கு ரொக்கெட் அனுப்பும் முயற்சி மேற்கொள்வதாக முடிவு செய்யப்பட்டிருந்தது.

தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி உற்சாகம் ஊட்டுவதாக இருப்பதால், அடுத்தாண்டு நவம்பர் மாதம் செவ்வாய்க் கிரகத்திற்கு ரொக்கெட் அனுப்பும் பணி விரைவில் நடைபெறும்.

இதைத் தொடர்ந்து வருகிற 2014 - 2015ஆம் ஆண்டுகளில் சந்திரனில் ஆராய்ச்சி நடத்துவதற்காக சந்திராயன்-2 என்ற பெயரிலான ரொக்கெட் சுமார் ரூபா 82.50 கோடி செலவில் அனுப்பப்பட உள்ளதாக இஸ்ரோ கூறியுள்ளது.

# சிரியாவில் தூதரகங்களை மூட முடிவு; அகதிகளாக வெளியேறும் மக்கள்



சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக கடந்த ஓராண்டாக போராட்டம் நடைபெற்று வருகின்றது. தற்போது சிரியாவில் உள்ள தூதரகங்களை மூட முடிவெடுக்கப்பட்டுள்ளதால் மக்கள் அகதிகளாக வெளியேறி வருகின்றனர்.

இதனால் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் இதுவரை 8,500 பேர் பலியாகி உள்ளதாக ஐ.நா அறிக்கை வெளியிட்டுள்ளது. இருப்பினும் ஜனாதிபதி அசாத் பதவி விலக மறுத்து வருகிறார்.

சிரியாவின் இந்த போக்கை கண்டித்து அரபு கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள சவுதி அரேபியா, பக்ரைன், ஓமன், குவைத், கத்தார் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய 6 நாடுகள் தலைநகர் டமாஸ்கஸில் உள்ள தூதரகங்களை மூடி விடத் தீர்மானம் செய்துள்ளன.

ஏற்கனவே இந்த நாடுகள் அனைத்தும் தங்கள் நாடுகளில் இருந்த சிரியா நாட்டு தூதர்களை வெளியேற்றி விட்டன. தற்போது சிரியாவுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்த இந்த புதிய நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

சிரியாவின் வடக்கு பகுதியில் உள்ள இட்லிப் பிராந்தியத்தில் இராணுவத்தினர் இரக்கமின்றி அப்பாவி பொதுமக்கள் உட்பட 45 பேரை கொன்று குவித்துள்ளதாக மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகச் செய்திகள்

இவர்களில் 23 பேரின் கைகளை பின்புறமாக கட்டிவைத்து மிக கொடூரமான கொன்று இருக்கிறார்கள் என்றும் இவர்கள் தெரிவித்துள்ளனர். இராணுவத்தினரின் இந்த அத்துமீறல்களால் அச்சமடைந்த ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக வெளியேறி துருக்கி நாட்டிற்குள் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

# ஆப்கானின் கோரிக்கை அமெரிக்கா நிராகரிப்பு



ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் அமெரிக்க இராணுவ வீரர் துப்பாக்கியால் சுட்டதில் 16 அப்பாவி மக்கள் உயிரிழந்தனர்.

இதனால் அமெரிக்காவுக்கு எதிராக மீண்டும் போராட்டம் ஏற்படும் சூழ்நிலை உருவானது. இதனையடுத்து அமெரிக்க இராணுவ மந்திரி லியோன் பானெட்டா அவசர பயணமாக ஆப்கானிஸ்தான் சென்று ஜனாதிபதி கர்சாயை சந்தித்து பேசினார்.

இந்தச்சந்திப்பிற்கு பின்னர் கர்சாய் வெளியிட்ட ஒரு அறிக்கையில், கிராமப்பகுதியில் முகாமிட்டுள்ள நேட்டோ படை வீரர்கள் அங்கிருந்து அகற்றி நகர்புறத்துக்கு கொண்டு வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

ஆனால் கர்சாயின் இந்த யோசனையை அமெரிக்கா நிராகரித்து விட்டது. இது குறித்து அமெரிக்க இராணுவ உயரதிகாரி ஒருவர் கூறுகையில், அமெரிக்க மந்திரியின் சந்திப்பின் போது இதை கர்சாய் கூறவில்லை. மேலும் இது பாதுகாப்பு தொடர்பானது.

ஏற்கனவே திட்டமிடப்பட்ட பணிகளில் மாற்றம் செய்ய வேண்டிய சூழ்நிலை தற்போது ஏற்படவில்லை. எனவே அதில் எந்தவித மாற்றமும் செய்யப்பட மாட்டாது என்று உறுதியாக தெரிவித்துள்ளார்.

# மனித எலும்புக்கூட்டு உயிரினங்கள்

சீனாவின் யுனான் மாகாணத்தில் உள்ள குவாங்கி ஷுயான் என்ற இடத்தில் உள்ள ஒரு குகையில் கடந்த 1979ஆம் ஆண்டு மனித எலும்பு கூடு கண்டெடுக்கப்பட்டது.

அதேபோன்று கடந்த 1989ஆம் ஆண்டு மெங்காஷி என்ற இடத்தில் மற்றொரு குகையில் 2 எலும்பு கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

இவற்றை விஞ்ஞானிகள் ஆய்வு செய்ததில் மனித இனத்தைச் சேர்ந்த எழும்புக்கூடுகள் இல்லை என்று உறுதிசெய்தனர்.

மேலும் இந்த உயிரினம் 11,500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருக்க வேண்டும் என்று கணக்கிட்டுள்ளனர்.

ஆனால், இந்த எழும்புக்கூடுகள் எந்த இனத்தை சேர்ந்தவை என தெரியவில்லை என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

# விளக்கை அணைத்து அழகி பிரசாரம்



அவுஸ்ரேலியாவில் சுற்றுச் சூழலை பாதுகாப்பது தொடர்பாக ஒரு மணி நேரம் விளக்கை அணைத்து விழிப்புணர்வு பிரசாரம் நடைபெற உள்ளது. இதன் பிரசார தூதராக பிரபல மொடல் அழகி மிராண்டா கெர் அறிவிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பிரபல மொடல அழகி மிராண்டா கெர்(வயது-28). என்பவர் அழியும் நிலையில் இருக்கும் விலங்குகளைப் பாதுகாப்பது, வனங்களைப் பாதுகாப்பது, சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு ஆகியவற்றிலும் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்.

அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் கடந்த 2006 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சி 'எர்த் ஹவர்' என்ற பெயரில் நடத்தப்பட்டது.

நாடு முழுவதும் ஒரே நேரத்தில் மின்விளக்குகளை அணைத்து மக்கள் இதில் பங்கேற்றனர். உலகம் முழுவதும் இந்தக் கருத்து பரவியது. அதே போன்று கடந்தாண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி நடந்த நிகழ்ச்சியிலும் உலகம் முழுவதும் 135 நாடுகளில் 180 கோடி மக்கள் தங்கள் வீடுகளில் விளக்கை அணைத்தனர். தற்போது இரண்டாம் ஆண்டாக இந்த நிகழ்ச்சி வரும் 31ஆம் திகதி நடத்தப்படுகிறது. இதன் பிரசார தூதராக மிராண்டா கெர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# 40இலட்சம் ஏ.கே.47 ரஷ்யாவில் துவம்சம்



ரஷ்யாவில் 2015ஆம் ஆண்டுக்குள் ஏகே 47 உட்பட 40 இலட்சம் துப்பாக்கிகளை அழித்து விட முடிவு செய்யப்பட்டுள்ளது

இதுகுறித்து ரஷ்ய நாளிதழில் இஸ்வெஸஷியா வெளியிட்டுள்ள செய்தியில், ரஷ்ய இராணுவத்தில் நவீன ஏகே 47 ரக தானியங்கி உட்பட பல விதமான துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அவை கண்டுபிடிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது அவற்றைவிட அதிநவீன வசதிகளுடன் கலாஸ்னிகோவ் ரக துப்பாக்கிகள் இராணுவ பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

பழைய துப்பாக்கிகள் இலட்சக்கணக்கில் இராணுவ குடோன்களில் குவித்து வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஒரு கோடியே 60 இலட்சத்துக்கும் அதிகமான துப்பாக்கிகள் பல கிடங்குகளில் உபயோகமற்று கிடக்கின்றன.

இவற்றில் 40 இலட்சத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் முற்றிலும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. அவற்றை 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் அழித்து விட இராணுவம் திட்டமிட்டுள்ளது.

ரஷ்ய இராணுவத்தில் ஒரு இலட்சம் வீரர்கள் உள்ளனர். அவர்களுடைய எண்ணிக்கையை விட பல மடங்கு அதிகமாக துப்பாக்கிகள் இருக்கின்றன. எனவே அவற்றின் எண்ணிக்கையை குறைக்க இராணுவம் திட்டமிட்டுள்ளது என்று நிபுணர்கள் கூறியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பதிவிறக்கப் பெட்டகம்

யார் மீதும் மோதிக்
கொள்ளாதிருக்கும் கவனத்துடன்
யாரும் நடப்பதாகத் தெரியவில்லை
ஆனாலும்
யாரும் யார்மீதும் பெரும்பாலும்
மோதிக்
கொள்வதில்லை.
– பா.வெங்கடேசன்

கரை தொட்ட பேரலை
கடல் திரும்பி
தன்னுருவம் இழந்தது
உருவமிழக்கு முன்பே
கால்கள் நனைத்தது
மனமோ ஈரமானது…
கடல் சென்ற பேரலை
கடலாய் இருக்கிறது
கடல்
கரை தொடும் பல
அலைகள் கொண்டது.
– ஷாஅ

வற்றிய என்னிதயம்
ஊற்றெடுக்காது
இன்றோர் வசந்தத்திற்காய்
அவற்றின் மலர்களுக்காய்…
மீட்டெடுத்த என் கனவுகள்
மாண்டு போயின!
என் வசந்தம்
வராமலே போய்விட்டது!
– அஸ்வகோஸ்

சந்திவிளக்கோ இருட்டைத்
தறித்து வேட்டை ஆடும்
அங்கு பறக்கும் ஈசல்
ஆவி கொறிக்க வௌவால்
வந்து பறக்கும்; கீழே
வாயில் எச்சில் ஊற
குந்தி இருக்கும் பூனை
குறித்து வௌவால் உயிரை!
ஒன்றின் உயிரில் ஒன்று
உலகே வேட்டைக் காடு!
– மு.பொ.

பேசி,
அழவைக்க
மிச்சமிருக்கிறது
கொஞ்சம் கவிதைகளும்
கடிதங்களும்.
– ரவி சுப்பிரமணியன்

அழுக்கழ நாம் கூறிக்கொள்கிறோம்
அவசரப்பட்டு விட்டோம்
இன்னும் யோசித்து இருக்கலாம்.
– அப்பாஸ்

ஊர்த் தீயை
அணைக்கலாம்
உலைத் தீயிலும்
ஒரு கண் இருக்கட்டும்.
எட்டுமணி நேரம்
வேலை செய்ய வேண்டும்
எட்டுமணி நேரம்
தூங்க வேண்டும்.
எத்தனை மணிநேரம்
வாழ வேண்டும்?
– விக்ரமாதித்யன்

பழத்தின் அழகை
பாராட்டுகிறார்
உள்ளிருந்து குடையும்
வண்டின் குடைச்சலை
யாரறிவார்?
– அபி

எதிரொலிக்கும் கேள்விகளில்
எடுத்தடுக்கும் விடைகளிலும்
புதிர் அவிழும், புதிதாய் ஓர்
இடைச்செருகல் புதிராகும்.
– ருத்ரன்

எல்லா இடத்திலும்
பொய் சொல்ல வேண்டியிருக்கிறது
கண்ணாடியில்
சிரிக்கும் பொழுதும் கூட.
– சல்மா

தலையைச் சொறி!
நாக்கைக் கழு!
பல்லை இளி!
முதுகை வளை!
கையைக் கட்டு!
காலைச் சேர்!
என்ன இது?
வயிற்றைக் கேள்
சொல்லுமது.
– ஷண்முக சுப்பையா

சந்திரோதயம் நன்று
தெரியும் விதமாய் ஒரு தோட்டம்
தோட்டத்து நெல்லி மரத்தில்
கயிற்றால் ஒரு ஊஞ்சல்
"கருக்கலாகியும் சமஞ்ச குமரிக்கு
என்ன விளையாட்டுடி" எனச்
சத்தமாய் அம்மாவின் கூப்பாடு.
அப்படியே குதித்து இறங்கி
ஓடுவாள்.
ஊஞ்சல் மட்டும்
தனியே ஆடிக்கொண்டிருக்கும்
கைரேகை மங்கும் கருக்கலில்.
– கலாப்ரியா

கூண்டுக் கிளிகள்
காதலால் பிறந்த
குஞ்சுக் கிளிக்கு
எப்படி எதற்கு
வந்தன சிறகுக்ள்?
– கல்யாண்ஜி

எந்த நாட்டிலும் சென்று
வசிக்கத் தயார்
எந்த நகரத்திலும் குடியேற
அச்சமில்லை
எந்த மனிதரோடும் பேச
தைரியம் உண்டு
எங்கள் ஊரைத் தவிர.
– இரா. பொன்னாண்டான்

பால் குடிக்க வேண்டுமென்றால்
முன்னங்கால்கள் மடக்கி
முட்டி போட்டு
பணிவுடன் பதுங்கினால்தான்
மடியெட்டும்
என்பதாய் இருக்கிறதிந்த வாழ்வு!
– இ.குமாரன் ஞா.திரவியம்

மூச்சை மெலிதாக இழுத்து விடுங்கள்
இங்கு எல்லாமே சரியாக உள்ளது.
– ஆத்மாநாம்

# யார் இந்த யூதர்கள்?

‘யூதர்கள் உலகம் முழுவதும் பரந்து வாழ்கிறார்கள். ஆனால் யூதர்களுக்கு என்று ஒரு தாயகம் இல்லை.’ இந்தக் கூற்று முதலில் சியோனிச தேசியவாதிகளின் சுலோகமாக இருந்தது. பின்னர் ஆங்கிலேய, பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களால் உலகம் முழுவதும் பரப்பப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியக் கண்டத்தில் உருவான தேசியவாத எழுச்சியின் எதிர்வினையாகத்தான், சியோனிச அரசியல் அமைப்பு உருவானது. அவர்களது அரசியல் ஒரு மத நூலான பைபிளை அடிப்படையாக கொண்டிருந்தது. (யூத மதத்தவரின் புனித நூலான ‘தோரா’, கிறிஸ்தவர்களால் பைபிளில் ‘பழைய ஏற்பாடு’ என்ற பெயரில் இணைக்கப்பட்டது.)

பைபிளில் வரும் சரித்திர சம்பவங்கள் போன்று தோற்றமளிக்கும் கதைகள், புராண - இதிகாச தரவுகளை விட சற்றுதான் வேறுபடுகின்றது. சரித்திரம் என்பது, ஒரு சம்பவம் நடந்ததாக விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப் பட வேண்டிய தேவை உள்ள ஒன்று. இல்லாவிட்டால் அவை வெறும புராண - இதிகாச கதைகள் என்ற வரையறைக்குள்தான் வரும்.

சில உண்மைகள் இருக்கலாம், சம்பவங்கள் ஒன்றில் வேறு இடத்தில், வேறு பெயரில் சியோனிஸ்டுகள், பைபிளின்படி தமது தாயகமான இஸ்ரேல், அப்போது பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த பாலஸ்தீனத்தில் இருப்பதாக நம்பினர். பைபிள் என்ற மத நூலை, தமது இயக்கத்திற்கான அரசியல் தத்துவார்த்த நூலாக மாற்றினர்.

பாலஸ்தீனத்தில் (அதாவது தமது முன்னோரின் தாயகத்தில்) சென்று குடியேறுவதற்காக உலகம் முழுவதும் யூத முதலாளிகளிடம் நிதி சேர்த்தனர். ஆரம்பத்தில் கிழக்கு ஐரோப்பிய யூதர்கள்தான், பாலஸ்தீனத்தில் சென்று குடியேற முன்வந்தனர். (ரஷ்ய பேரரசர் சார் ஆட்சிக்காலத்தில் நடந்த, யூதர்களுக்கெதிரான ‘பொக்ரொம்’ என்ற இனப்படுகொலை ஒரு காரணம்.) சியோனிச அமைப்பு சேகரித்த நிதியைக் கொண்டு, பாலஸ்தீன நிலவுடமையாளரிடம் நிலங்களை வாங்கி குடியேறினர்.

இரண்டாம் உலக யுத்தம் நெருங்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில், பெருமளவு யூதர்கள், கப்பல் கப்பலாக பாலஸ்தீனம் செல்வதை, பிரிட்டன் விரும்பவில்லை. அதனால் பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டன. அப்போது பாலஸ்தீனத்தில் இருந்த யூதர்கள் பயங்கரவாத குழுக்களை உருவாக்கி, பிரிட்டிஷ் இலக்குகளை தாக்கினர்.

ஜேர்மனியில் ஹிட்லரின் யூத இனப்படுகொலையும், இரண்டாம் உலகப் போரில் நேச நாடுகளின் வெற்றியும், உலக வரைபடத்தை மாற்றியது. இஸ்ரேல் - பாலஸ்தீனம் என்ற இரு தேசங்களை உருவாக்க பிரிட்டனும், ஐக்கிய நாடுகள் சபையும் ஒப்புக் கொண்டன. சியோனிஸ்டுகளின் இஸ்ரேலிய தாயகக் கனவு நிஜமானது.

அவர்கள் எழுதி வைத்த அரசியலயாப்பின்படி, உலகில் எந்த மூலையில் இருக்கும் யூதரும், இஸ்ரேலின் பிரசையாக விண்ணப்பிக்கலாம். (பூர்வ குடிகளான பாலஸ்தீன அரேபியருக்கு அந்த உரிமை இல்லை). அதனபடி ஐரோப்பாவில் வசித்த யூதர்கள் மட்டுமல்ல, ஈராக், யேமன், மொரோக்கோ போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் வசித்த யூதர்களும் இஸ்ரேலில் வந்து குடியேறுமாறு ஊக்குவிக்கப்பட்டனர். பெரும் பணச் செலவில், அதற்கென பிரத்தியேகமாக அமர்த்தப்பட்ட வாடகை விமானங்கள், இலட்சக் கணக்கான யூதர்களை இஸ்ரேல் கொண்டு வந்து சேர்த்தன. இந்தியா, கேரளாவில் இருந்தும் சில ஆயிரம் யூதர்கள் சென்று குடியேறினர்.

சியோனிஸ்டுகள் கண்ட கனவு நிதர்சனமானாலும், இஸ்ரேல் என்ற தாயகத்தை கட்டியெழுப்ப தேவையான மனிதவளம் இருந்த போதும், வேண்டிய நிதி வழங்க யூத பெருமுதலாளிகள் மற்றும் (குற்றவுணர்வு கொண்ட) ஜேர்மனி இருந்த போதும், ஒரேயொரு குறை இருந்தது. இஸ்ரேல் என்ற தாயகக் கோட்பாட்டின் நியாயவாத அடிப்படை என்ன? பைபிளை தவிர வேறு எந்த ஆதாரமும் இருக்கவில்லை. இன்றைய விஞ்ஞான உலகில் ஒரு மத நூலை ஆதாரமாக காட்டி யாரையும் நம்பவைக்க முடியாது. சரித்திரபூர்வ ஆதாரங்கள் தேவை.

பைபிளில் எழுதியிருப்பதெல்லாம் உண்மை என்று நம்பும் இஸ்ரேலிய ஆட்சியாளர்கள், அவற்றை நிரூபிக்கும் நோக்கில், சரித்திர ஆசிரியர்களையும், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களையும், மொழியியல் அறிஞர்களையும் பணியில் அமர்த்தினர். இஸ்ரேல் உருவாகி அறுபது ஆண்டுகளாகியும், இந்த ஆராய்ச்சியளரால் பைபிளில் உள்ளபடி ‘புலம்பெயர்ந்து வாழும யூத மக்களின் தாயகம் இஸ்ரேல்’ என்னும் கருத்தை இன்று வரை நிரூபிக்க முடியவில்லை.

மேலும் பைபிளில் எழுதப்பட்டுள்ள கதைகள் உண்மையில் நடந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை.

பிள்ளையார் பிடிக்கப் போய், அது குரங்காக மாறிய கதையாக, தாம் காலங்காலமாக கட்டி வளர்த்த நம்பிக்கை தகருவதை காணப் பொறுக்காத இஸ்ரேலிய ஆட்சியாளர்கள், இந்த ஆராய்ச்சி முடிவுகளை வெளிப்படுத்த தயக்கம் காட்டுகின்றனர். இன்று வரை உலகில் சிலருக்கு மட்டுமே தெரிந்த, ஆராய்ச்சியின் பெறுபேறுகளை இங்கே தொகுத்து தருகிறேன்.

1980 ஆம் ஆண்டு இடம்பெற்ற நிலநடுக்கம் சியோனிச கட்டுக்கதைகளை அம்பலப்படுத்தியது. அதுவரை அறியாத பழங்கால இடிபாடுகளை வெளிப்படுத்தியது, அந்த நிலநடுக்கம். ஆனால் அந்த கண்டுபிடிப்புகள் எதுவும் யூத கதைகளை உண்மையென்று நிரூபிக்காததால், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஏமாற்றமடைந்தனர். அதிலிருந்து தான் இஸ்ரேலின், அல்லது யூத வரலாற்றை புதிய கண்ணோட்டதுடன் பார்க்கும் போக்கு ஆரம்பமாகியது. பைபிளில் கூறப்பட்டுள்ள பெரும்பாலான கதைகள் உண்மையாக இருக்க முடியாது என்பது நிரூபிக்கப்பட்டது.

கிறிஸ்தவர்களுக்கு இயேசு எந்த அளவுக்கு முக்கியமோ, அது போல யூதர்களுக்கு மோசெஸ் ஒரு கேள்விகிடமற்ற தீர்க்கதரிசி. எகிப்தில் அடிமைகளாக இருந்த யூத குடிகளை மோசேஸ விடுதலை செய்து, செங்கடலை கடந்து, கடவுளால் நிச்சயிக்கப்பட்ட நாட்டிற்கு (பாலஸ்தீனம்) கூட்டிச் சென்றதாக பைபிள் கூறுகின்றது. ஆனால் சரித்திர ஆசிரியர்கள் அப்படி ஒரு சம்பவம் நடந்திருக்க வாய்ப்பில்லை என்று நிரூபிக்கின்றனர்.

முதலாவதாக இப்போது உள்ளது போல அப்போதும், எகிப்திற்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையில் நிலத் தொடர்பு இருந்திருக்கும் போது, மோசெஸ் எதற்காக கஷ்டப்பட்டு கடல் கடக்க வேண்டும்?

இரண்டாவதாக பைபிள் கூறும் காலகட்டத்தை வைத்துப் பார்த்தால் கூட, அன்று பாலஸ்தீனம் எகிப்து தேசத்தின் ஒரு பகுதியாக இருந்தது. மோசெஸ வழிநடத்திய யூத குடிமக்கள் எகிப்தின் உள்ளே தான் இடப்பெயர்ச்சி செய்திருக்க வேண்டும்.

மூன்றாவ்தாக எகிப்தியர்கள் பல சரித்திர குறிப்புகளை ஆவணங்களாக விட்டுச் சென்றுள்ளனர். அவை எல்லாம் தற்போது மொழிபெயர்க்கப்பட்டு விட்டன. ஆனால் எந்த இடத்திலும் யூதர்களை அடிமைகளாக பிடித்து வைத்திருந்ததாகவோ, அல்லது இஸ்ரேலிய அடிமைகள் கலகம் செய்ததாகவோ குறிப்பு காணப்படவில்லை.

அன்றைய காலகட்டத்தில் ஈரானிலும், ஈராக்கிலும் சராதூசரின் மதம் பரவியிருந்தது. அவர்கள் ‘மாஸ்டா’ என்ற ஒரேயொரு கடவுளை வழிபட்டனர். இதிலிருந்து தான் யூத மதமும், யாஹ்வே அல்லது எல் (ஒரு காலத்தில் சிரியர்கள் வழிபட்ட கடவுளின் பெயர்) என்ற ஒரே கடவுளை வரித்துக் கொண்டது. பிற்காலத்தில் யூதர்களிடம் இருந்து கற்றுக்கொண்ட, ‘ஒரு கடவுள் கோட்பாட்டை’ கிறிஸ்தவர்களின் மீட்பர் இயேசு, மற்றும் முஸ்லிம்களின் இறைதூதர் முஹம்மது ஆகியோர் பின்பற்றினர்.

கி.பி. 70ஆம் ஆண்டுக்கு முன்னர் யூதர்களின் தாயக பூமி, ரோமர்களின் சாம்ராஜ்யத்தின் கீழ் இருந்தது. ஜெருசலேமில் யூதர்களின் மிகப் பெரிய கோவில் சேதமடைந்த பின்னர், முழு யூத மக்களையும் ரோமர்கள் நாடுகடத்தியதாக இதுவரை நம்பப்பட்டு வருகின்றது. அதனால் தான் யூதர்கள் மத்திய ஆசியா, ஐரோப்பா எங்கும் புகலிடம் தேடியதாக, இன்றுவரை அவர்கள் வேற்று இனத்துடன் கலக்காமல் தனிதத்துவம் பேணியதாக, யூதர்கள் மட்டுமல்ல பிறரும் நம்புகின்றனர்.

ஆனால் ரோமர்கள் எந்த ஒரு தேச மக்களையும் ஒட்டு மொத்தமாக நாடு கடத்தியதாக வரலாறு இல்லை. ரோமர்கள் பல இனத்தவரை அடிமைகளாக்கியிருக்கிறார்கள். அப்போது கூட குறிப்பிட்ட பிரதேசத்தை சேர்ந்த சிறு தொகையினர் அடிமைகளாக ரோமாபுரி செல்ல, பெரும்பான்மை மக்கள் அங்கேயே வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

இதிலிருந்து ஒன்று தெளிவாகின்றது. யூத மக்கள் எங்கேயும் புலம்பெயராமல் அங்கேயே வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஆகவே இன்றுள்ள பாலஸ்தீன அரேபியர்கள் தான் உண்மையான யூதர்கள் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. அவர்கள் பிற்காலத்தில் இஸ்லாமியராகவும், கிறிஸ்தவர்களாகவும் மாறியிருக்கலாம்.

இன்று இஸ்ரேலிய ஆராய்ச்சியாளரின் முடிவுகள் வந்த பின்னர் கூட பலர் பகிரங்கமாக இதைப்பற்றி பேச மறுக்கின்றனர். ‘யூத எதிர்ப்பாளர்’ என்ற முத்திரை குத்தப் பட்டுவிடும் என்ற அச்சமே காரணம். மேற்குலகில் யூத எதிர்ப்பாளர் என்று சொல்வது, இன

**- கலையரசன்**

வெறியர் என்று சொல்வதற்கு சமமானது.

யூத இனத்தவர்கள் உலகம் முழுவதும் புலம் பெயர்ந்து செல்லவில்லை என்றால், ‘யார் இந்த யூதர்கள்’ என்ற கேள்வி எழுகிறதல்லவா? ‘யூத இனம்’ என்ற தவறான கோணத்தில் இருந்து பார்ப்பதால் இந்த குழப்பம் ஏற்படுகினறது. யூதர்கள் என்பது ஒரு மதத்தை சேர்ந்தவர்களை குறிக்கும் சொல்லாகும். கிறிஸ்தவ மதம் தான் பிறந்த மண்ணை விட்டு, வெளி உலகத்தில் பரவியது போன்று, யூத மதமும் பரவியது.

மதப் பிரசாரகர்கள் யூத மதத்தை மத்திய கிழக்கு எங்கும் பரப்பினர். அரேபியா (யேமன்), வட ஆப்பிரிக்கா (மொரோக்கோ), மத்திய ஆசியா (குர்திஸ்தான்) போன்ற இடங்களில் எல்லாம், அண்மைக்காலம் வரை யூதர்கள் இலட்சக்கணக்கில் வாழ்ந்து வந்தனர். முதலில் அரேபிய - இஸ்லாமிய படையெடுப்பை எதிர்த்த யூதர்கள், பிற்காலத்தில் அரேபிய படைகளுடன் இணைந்து, ஸ்பெயினை கைப்பற்றி அங்கேயும் குடியேறி இருந்தனர்.

நீண்ட காலமாக, யூதர்கள் என்பது ஒரு இனம் என்ற கருத்தியலை, மரபணு சோதனை மூலம் நிரூபிப்பதற்கு முயற்சி நடந்தது. சில ஆராய்ச்சி முடிவுகள், யூதர்கள் தனியான மரபணு கொண்டிருப்பதாக தெரிவித்த போதும், அவற்றின் நம்பகத்தன்மை கேள்விக்குரியது. பொதுவான பெறுபேறுகள், யூதர்களும் அந்தந்த நாடுகளில் வாழும பிற மக்களும், ஒரே விதமான மரபணு கொண்டுள்ளதை எடுத்துக்காட்டுகின்றன.

இதனை பரிசோதனைச் சாலையில் விஞ்ஞானிகள் சோதித்துதான் அறிய வேண்டிய அவசியமில்லை. யூதர்களிடையே வெளிப்படையாகத் தெரியும் வேறுபாடுகள் நிறைய உள்ளன. ஐரோப்பிய யூதர்கள் வெள்ளைநிற ஐரோப்பியர் போலவும், எத்தியோப்பிய யூதர்கள் கறுப்புநிற ஆபிரிக்கர் போலவும் வெளித்தோற்றத்தில் காணபடுவதை வைத்தே கூறிவிடலாம், யூதர்கள் ஒரே இனமாக இருக்க சாத்தியமே இல்லை என்று. யூத இன மையவாதத்தை ஆதரிப்பவர்கள் இந்த எளிய உண்மையை காண மறுக்கின்றனர்.

இன்றைய இஸ்ரேலிய தேசத்தின் அரசியல், இராணுவ, பொருளாதார ஆதிக்கம் ஐரோப்பாவில் இருந்து வந்து குடியேறிய யூதர்களின் கைகளில் உள்ளது. இவர்களது நதிமூலம் பற்றிய சுவாரஸ்யமான ஆய்வுகள் நடந்துள்ளன. அந்த தேடலில் ‘கஸார்’ இராசதானி பற்றி தெரியவந்தது. அதுவே ஐரோப்பிய யூதர்களின் மூலமாக நம்பப்படுகின்றது.

கஸார் மக்கள் மத்திய ஆசியாவை சேர்ந்த துருக்கி மொழி பேசும் இனத்தை



சேர்ந்தவர்கள். மேற்கே கிறிஸ்தவ மதமும், கிழக்கே இஸ்லாமிய மதமும பரவிக் கொண்டிருந்த காலம் அது. இரண்டுக்குமிடையே தமது தனித்தன்மையை காப்பாற்றுவதற்காக, கஸார் ஆளும் வர்க்கம் யூத மதத்திற்கு மாறியது. இந்த மத மாற்றம் அரசியல் காரணத்திற்காக ஏற்பட்ட ஒன்று. இன்று நடுநிலை பேண விரும்பும் சுவிட்சர்லந்துடன் ஒப்பிடத்தக்கது.

கஸார் இராசதானி ரஷ்யர்களால் வீழ்த்தப்பட்ட பிறகு கஸார் மக்கள் அந்தப் பிரதேசத்தில் இருக்கும் பிற இனத்தவர்களுடன் கலந்து விட்டனர். பெரும்பாலானோர் யூத மதத்தை கைவிட்டு, இஸ்லாமியராகி விட்டனர்.

இருப்பினும் குறிப்பிடத்தக்க கஸார் யூதர்கள் போலந்திற்கும், பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் புலம்பெயர்ந்ததாக நம்பப்படுகின்றது. புலம்பெயர்ந்த யூதர்கள் யிட்டிஷ். கலாசாரத்தை உருவாக்கினர். யிட்டிஷ் என்பது, ஹீப்ரூ, ஜேர்மன், ஸ்லோவாக்கிய சொற்கள் கலந்த மொழியைக் குறிக்கும். கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பாவில் வாழ்ந்த யூதர்கள் இந்த மொழியை பேசினர். நவீன இஸ்ரேல் உருவாகி; ஹீப்ரூ உத்தியோகபூர்வ மொழியாகிய பின்னர், இப்போது அந்த மொழி மறைந்து வருகின்றது.

இஸ்ரேல் என்ற தேசம் உருவானபோது, அங்கே யூதர்களின் புராதன மொழியான ஹீப்ரூ பேசுவோர் யாரும இருக்கவில்லை. எல்லோரும் அதற்கு முன்னர் வாழ்ந்த நாட்டு மொழிகளையே பேசினர், இன்றும் கூட வயோதிபர்கள் ஜேர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம், அரபு என்று பல்வேறு மொழிகளை வீடுகளில் பேசி வருகின்றனர். இளம் சந்ததி மட்டுமே ஹீப்ரூ மொழியை தமது தாய் மொழியாக்கியது.


உண்மையில் பல்வேறு கலாசாரப் பின்னணியைக் கொண்ட யூதர்களை, ஒரே இனமாக இஸ்ரேல் என்ற தேசத்தினுள் ஒற்றுமையாக வைத்திருப்பது கடினமான விடயம். (‘எங்கள் யூத சமூகத்திற்குள் ஒற்றுமையில்லை.’ என்ற சுயபச்சாதாபம் இஸ்ரேலியர் மத்தியில நிலவுகின்றது.) அதற்காகதான் இஸ்ரேலிய அரசு, பைபிள் கதைகளை நிதர்சனமாக்க இராணுவ பலம் கொண்டு முயற்சித்து வருகின்றது.

தமது ஆக்கிரமிப்பை, ‘கடவுளால் முன்மொழியப்பட்டது’ என்பதால் நியாயமானது என்று வாதிடுகின்றனர். அதனால்தான், யூத குடிகளின் முதலாவது ஒப்பற்ற பெருந்தலைவனான, டேவிட் மன்னன் தலைநகராக வைத்திருந்த ஜெருசலேமை (அது இப்போது இருக்கும் நகரை விட அளவில் சிறியதாக இருந்தது) நவீன இஸ்ரேலின் தலைநகராக்குவதன் மூலம், தமது சரித்திர ஆதாரத்தை எதிர்காலத்திலேனும் நிலைநாட்ட முயல்கின்றனர்.

வடக்கின் பெரும் போர்

# 10 ஆவது ஒருநாள் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வெற்றி



படப்பிடிப்பு - சுரேஸ்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் பெரும்போர் போட்டியில் கலந்துகொள்ளும் யாழ். மத்திய கல்லூரிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 10 ஆவது மட்டுத்தப்பட்ட 50 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டியில் 62 ஓட்டங்களால் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணித்தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

அதன்படி 44 ஓவர்களில் 193 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் மத்திய கல்லூரி அணி இழந்தது. மத்திய கல்லூரி அணி சார்பில் கபிலன் 48, நிரோஜ் 42, சௌமீதரன், மதுசனன் மற்றும் அணித்தலைவர் கோகுலன் ஆகியோர் தலா 12 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் சார்பில் பந்துவீச்சில் ரஜிந்தன் 4, துவாரக்சீலன் 2, பிருந்தாபன், அமிர்தபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இவ் இனிங்ஸில் நிரோஜ், கபிலன் ஆகியோரின் இணைப்பாட்டம் மூலம் 2 ஆவது விக்கெட்டுக்கு 63 ஓட்டங்கள் கிடைக்கப்பெற்றமையும், உதிரிகளாக சென்.ஜோன்ஸ் கல்லூரி 37 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து 194 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி எனத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, 46 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் 62 ஓட்டங்களால் யாழ் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் சார்பாக அணித்தலைவர் அற்றியன் 32, துவாரகசீலன் மற்றும் விந்தர்கரன் ஆகியோர் தலா 19, கீர்த்திகன் 11 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணியின் சார்பில் சௌமீதரன் 3, கோகுலன் 2, கிசாந்தன், கபிலன், டார்வின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக யாழ். மத்திய கல்லூரி அணியைச் சேர்ந்த கபிலன் தெரிவுசெய்யப்பட்டார்.

இவ்வெற்றியின் மூலம் கடந்த 10 வருடங்களாக ஆடப்பட்டு வருகின்ற இரு பாடசாலைகளுக்குமிடையிலான ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டித் தொடர் முடிவுகள் 5:5 என்ற வகையில் அமைகின்றது. அதாவது இரு அணிகளும் தலா 5 வெற்றிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (42,20)

# ஆட்டோ சங்கத்தில் கத்திக் குத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆட்டோ சாரதிகள் சங்கத்தில் ஏற்பட்ட தகராறில் ஆட்டோ சங்கத்தைச் சேர்ந்தவருக்கு கத்திக்குத்து விழுந்தது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

கிளிநொச்சி ஆட்டோ சாரதிகள் சங்கத்தில் ஆட்டோக்களுக்கான இட ஒதுக்கீடு சம்பந்தமான பிரச்சினை குறித்து நேற்றுப் பகல் கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி கைகலப்பாக மாறியது. இதேவேளை, கத்தியுடன் கூட்டத்திற்கு வந்த விமலநாதன் சுதாகரன் (வயது - 32) என்பவர் செல்லத்துரை செல்வநாயகம் (வயது - 46) என்பவரை 2 முறை கத்தியால் குத்தியுள்ளார்.

கத்திக்குத்துக்கு இலக்கானவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கத்தியால் குத்தியவர் கிளிநொச்சி பொலிஸில் சரணடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

முன்விரோதம் காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் குறித்த நபர் கத்தியால் குத்துவதற்கு திட்டமிட்டு வந்துள்ளதாகவும் அங்கிருந்தவர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். (77)

# ஜெனிவா பிரேரணைக்கு எதிராக முஸ்லிம் நாடுகள் ஒன்றிணையும்

## அமைச்சர் றிஸாட் நம்பிக்கை

(கொழும்பு)

ஜெனிவாவில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கூட்டத் தொடரில் முஸ்லிம் நாடுகள் ஒன்றிணைந்து இலங்கைக்கு பலம் சேர்க்க முயற்சிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்ந்தும் நட்பினை பேணவே விருப்பம் கொள்வதாக அமைச்சர் றிஸாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அண்மைக்கால வரலாற்றில் ஒரே இலக்கை கொண்டு இலங்கையிலிருந்து பயங்கரவாதத்தை ஒழித்த ஒரே தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கு உதவ நட்பு நாடுகள் இருக்கின்றன என அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையைச் சுற்றி சுபீட்சத்தை ஏற்படுத்த சிறப்புப் பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன. பயங்கரவாதத்திற்கு எதிராக போராடி வெற்றி கொண்ட வீரர்களை அவமானப்படுத்த சர்வதேச நாடுகள் கொண்டுவந்துள்ள தீர்மானம் வெகு விரைவில் அவர்களாலேயே கைவிடப்படும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# குடிசன மதிப்பீட்டில் 85 வீத பணிகள் நிறைவு


(கொழும்பு)

கடந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட குடிசன மதிப்பீடு பணிகளில் 85 வீதமானவை நிறைவடைந்துள்ளதாக குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. பெப்ரவரி 27ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட குடிசன மதிப்பீடு எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. 19 ஆம் திகதி நாடு முழுவதிலும் குடிசன மதிப்பீட்டு பணிகளை 100 வீதம் நிறைவுக்கு கொண்டு வரவுள்ளதாக குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் கொழும்பு போன்ற சனத்தொகை அதிகம் உள்ள நகரங்களின் கணக்கெடுப்புப் பணிகள் நிறைவடையாது போனால் 19 ஆம் திகதி குடிசன மதிப்பீடு பணிகள் நிறைவடையாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இலங்கை பிரமுகர்களின் பயணம் தமிழக அரசுக்கு தெரிவிக்கப்படும்

## பிரதமர் மன்மோகன் உறுதியளிப்பு




(புதுடில்லி)

இலங்கை பிரமுகர்களின் தமிழக பயணம் குறித்து முன்கூட்டியே தமிழக அரசுக்கு தெரிவிக்கப்படுமென இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார்.

இலங்கை பிரமுகர்களின் திடீர் பயணத்தால் தமிழகத்தில் பல்வேறு சட்டம் மற்றும் ஒழுங்கு சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுவதாகவும், எனவே அவர்களது பயணம் தொடர்பாக தமிழக அரசுடன் அவசியம் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் அண்மையில் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடிதம் அனுப்பியிருந்தார்.

இந்நிலையில், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் கடிதத்திற்குப் பதிலளித்து பிரதமர் மன்மோகன் சிங் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது

இலங்கை பிரமுகர்களின் தமிழகப் பயணம் தொடர்பாக தமிழக அரசுக்கு முன்கூட்டியே தெரியப்படுத்துமாறு குறிப்பிட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் இக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## மர்மப்பொருள்...

(வயது - 10), ஜுட் டிலக்சன் (வயது - 2), சௌந்தரராஜன் கஜேந்திரன் (வயது - 16), சௌந்தரராஜன் சசிதரன் (வயது - 8), சௌந்தரராஜன் சுஜீவன் (வயது - 14) ஆகிய 6 சிறுவர்கள் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (77)

## ரணிலின்...

யாழ்ப்பாணத்தில் ஐ.தே.க. நடத்தவுள்ள மே தினப் பேரணிக்கு ஆதரவு தேடும் நோக்கில் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்திற்கு தனது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் வருகை தந்த எதிர்க்கட்சித் தலைவர் அன்றைய தினம் இரவு குறித்த விடுதியின் விருந்தினையும் நடத்தியுள்ளார். இந்த விருந்திலேயே கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சரவணபவன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

## பரிந்துரைகளை...

தயாரித்துள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இதுபற்றித் தெரிவிக்கையில்,

இவ் அறிக்கை ஜெனிவாவில் ஐ.நா.வின் மனித உரிமை ஆணைக்குழுவில் கையளிக்கப்படும். அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை நாட்டுக்கு பாதகமானது அல்ல. இப்பிரேரணை நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும், நடைமுறைப்படுத்தலுக்கு அரசின் ஈடுபாட்டையுமே குறித்து நிற்கின்றது.

# 3 கி.மீ தூரத்திற்கு 20 ரூபா அறவீடு

மல்லாவியிலிருந்து துணுக்காய் பிரதேசத்திற்கு பயணம் செய்யும் பயணிகளிடம் ஒரு சில தனியார் பேருந்துகள் 20 ரூபா அறவிடுவதாகத் தெரியவருகின்றது.

இது குறித்து தனியார் பேருந்து சங்கத்திடம் முறையிட்டும் இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

துணுக்காய் பிரதேசத்திலேயே அரச நிர்வாக செயற்பாடுகள் மற்றும் சுகாதார, கமநல சேவை நிலையங்கள் இயங்குகின்றன. இதன் காரணமாக மல்லாவி பிரதேசத்தை சேர்ந்த பெருமளவானோர் நாள்தோறும் துணுக்காய் பிரதேசம் சென்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (143)

## ஆணைக்குழுவின்...

மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் எனப்படும் கே.பி.யை சர்வதேச 'குற்றவியல் நீதிமன்றில் ஒப்படைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் அதிகளவான இலங்கைப் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

52 பிரதிநிதிகள் அமர்வுகளில் கலந்து கொண்டுள்ளதாகவும், இது அரசாங்கப் பணத்தை விரயமாக்கும் முயற்சியாகவே கருதப்பட வேண்டும்.

பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியை நடத்தும் பொறுப்பை பெற்றுக் கொள்ளும் முனைப்புக்களுக்காகவும் அரசாங்கம் இவ்வாறு பாரியளவில் மக்கள் பணத்தை விரயம் செய்தது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கைப் பரிந்துரைகளையும் சில அமைச்சர்கள் எதிர்த்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## புலிகளுக்கு உயிரூட்ட...

யாழ்ப்பாணத்தை அடையும் பிரதான வழியான ஏ - 9 வீதியையும் இராணுவத்தினர் கைப்பற்றியதுடன், முல்லைத்தீவு பிரதேசத்தையும் மீட்டிருந்தனர்.

இந்தத் தருணத்தில், விடுதலைப் புலிகள், முல்லைத்தீவு மக்களை அவர்களின் இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றி கடற்கரையோரப் பிரதேசத்தில் ஒன்றுசேர்த்தனர். அவர்களை மனித கேடயங்களாக பயன்படுத்துவதற்கே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

தற்போது, மனித உரிமைகள் தொடர்பாக பேசுபவர்கள் அந்த தருணத்தில் மனித கேடயங்களை விடுத்து தோல்வியை ஏற்றுக் கொள்ளுமாறு விடுதலைப் புலிகளை ஏன் கோரவில்லை என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

அதற்கு மாறாக அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் புத்துயிர் வழங்கும் வகையில் செயற்பட்டனர். அவ்வாறு பொதுமக்கள் ஒன்று கூடிய பிரதேசத்தை இராணுவத்தினர் மோதல் தவிர்ப்பு வலயமாகவே அறிவித்தாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மேதினப் பேரணிக்கு ஆதரவு கோரி யாழ்.மக்களைச் சந்தித்தார் ரணில்



(யாழ்ப்பாணம்)

சுதந்திரத்தையும், சமாதானத்தையும் கொடுத்த அரசாங்கத்தால் வெள்ளை வான் கடத்தலை இல்லாது ஒழிக்க முடியாமற் போனது ஏன் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினமிரவு வருகை தந்த எதிர்க்கட்சித் தலைவர் நேற்றைய தினம் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் பொதுமக்களுடனான சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரிலிருந்து பயணத்தைத் தொடங்கிய எதிர்கட்சித் தலைவர் தலைமையிலான குழுவினர், கச்சாய் ஊடாக கொடிகாமம் சென்று அங்கிருந்து நெல்லியடி நகரைச் சென்றடைந்தனர்.

நெல்லியடி பேருந்து நிலையத்தில் நின்ற மக்களுடன் உரையாடிய அவர் அரசின் அடக்குமுறையை எதிர்ப்பதற்கு ஐ.தே. கட்சியுடன் அனைவரும் அணிதிரளவேண்டும். மே தினத்தன்று நடத்தப்படவுள்ள போராட்டத்திற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

பின்னர் பருத்தித்துறை பேருந்து நிலையத்திற்குச் சென்று அங்கும் மக்களுடன் கலந்துரையாடினார். இதன்பின்னர் பொலிகண்டி கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று பூசை வழிபாடுகளிலும் ஈடுபட்டார். அங்கு ஆலய தர்மகர்த்தாவிடம் ஒரு இலட்சத்திற்கான காசோலையையும் வழங்கினார். அதன்பின் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கும் சென்று பூசை வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் அங்குள்ள ஆச்சிரமம் ஒன்றில் தமது மதிய போசனத்தை முடித்துக்கொண்டு நீர்வேலிக்குச் சென்றார். அங்கு மக்களுடன் கலந்துரையாடிய வேளை நீர்வேலி மாதர் சங்கத்தினரால் தொழில்வாய்ப்புக் கோரி மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதன்பின், சுன்னாகம், மாதகல் உட்பட பல்வேறு பகுதிகளுக்கும் சென்று கலந்துரையாடல்களை நடத்தினார். இந்தக் கலந்துரையாடலின் போது, வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிப்புக்குள்ளாகிய மக்களை அந்தப் பாதிப்பிலிருந்து விடுவிக்க வேண்டுமெனவும், எரிபொருள் விலையேற்றத்தால் மக்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்த ரணில், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக்களை முடித்துக்கொண்டு நேற்று இரவு ரில்கோ விடுதியில் வர்த்தகப் பிரமுகர்கள், மதத்தலைவர்கள், மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் சுமார் ஆயிரம் பிரமுகர்களை அழைத்து வந்து யாழ்ப்பாணத்தில் மாபெரும் மே தினப் பேரணியை நடத்தவுள்ளதாகவும், அடுத்த தேர்தலுக்கு முன்னர் ஐ.தே.கட்சியின் கிளைகளை கிராமங்கள் தோறும் கட்சியின் காரியாலயங்களை அமைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மக்களுடனான சந்திப்பில் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அதற்கு உதவியளிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

குடாநாட்டில் மக்களைச் சந்தித்த ரணில் விக்கிரமசிங்கவுடன் 'கஜிவா' என்ற நான்கு வயது நிரம்பிய யானைக் குட்டியும் கூடவே வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (எஸ், 5,12,116)

## சபைக்குச் சமூமளிக்காத கூட்டமைப்பு உறுப்பினர்

நெடுந்தீவு பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டத்துக்கு கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்திலிருந்து இன்று வரை 6 அமர்வுகள் இடம்பெற்றுள்ளன. ஆனால பிரதேசசபைக்கு தெரிவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரேயொரு பிரதிநிதி நடைபெற்ற எந்தவொரு சபைக்கூட்டத்திலும் பங்குபற்றவில்லையென பிரதேசசபையின் தவிசாளர் தானியேல் றெக்சியன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவருக்கு வாக்களித்த மக்களுக்காக எதிர்வரும் சபையின் ஏழாவது அமர்வில் கலந்துகொள்ளுமாறு ஊடகம் வாயிலாகக் கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார்.

## நாய்க்காகச் சண்டை வைத்தியசாலையில் முதியவர்

(யாழ்ப்பாணம்)

சுதுமலைப் பகுதியில் நாய்களுக்கு இடையில் ஏற்பட்ட சண்டையில் தலையிட்ட முதியவர் ஒருவர் தலையில் அடிவாங்கிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

நேற்றுப் பகல்வேளை ஸ்ரீ சாந்தகுமார் (வயது-61) என்பவருடைய வீட்டு வளர்ப்பு நாய்க்கு அயல் வீட்டு நாய் உட்பட 3 நாய்கள் கடித்துள்ளன. இதனால் ஆத்திரம் அடைந்த உரிமையாளர் குறித்த 3 நாய்களையும் தாக்கியுள்ளார்.

இதனை அவதானித்த அயல் வீட்டு நாயின் உரிமையாளர் தன்னுடைய வளர்ப்பு நாயை அடித்ததற்காக ஸ்ரீ சாந்தகுமார் என்பவரைப் பொல்லால் தாக்கியதாகவும் தெரியவருகின்றது.

அடியினால் தலையில் காயமடைந்தவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (எஸ்)

## வீட்டிற்கு கல்வீச்சு

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேசசபை உறுப்பினரான க.பரஞ்சோதியின் கலட்டிப் பகுதியிலுள்ள வீட்டுக்கு நேற்று முன்தினம் விஷமிகள் சிலரால் கல்வீச்சும், வெற்றுச் சாராயப் போத்தல் வீச்சும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (18)

## ஆரோக்கியமான விளையாட்டில் ஆக்ரோசமான சண்டை

(கைதடி)

கைதடியில் இடம்பெற்ற தாச்சிப் போட்டியில் கலந்து கொண்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கைதடி கிழக்கு, விநாயகர் விளையாட்டுக் கழகத்தால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட தாச்சிப் போட்டியில் கைதடியைச் சேர்ந்த மின்னொளி விளையாட்டுக் கழகத்திற்கும், வளர்மதி விளையரட்டுக் கழகத்திற்கும் இடையில் போட்டிகள் இடம்பெற்றன.

மின்னொளி விளையாட்டுக் கழகம் 8 பழமும், வளர்மதி விளையாட்டுக் கழகம் 5 பழமும் எடுத்த நிலையில், போட்டி முடிவதற்கு 10 நிமிடங்கள் இருந்த நிலையில் வளர்மதி விளையாட்டுக்கழக ஆதரவாளர்கள் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த மற்றைய அணியினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தொடர்ந்து விநாயகர் விளையாட்டுக் கழகத்தினர் இது பற்றி சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாட்டினைச் செய்துள்ளதாகத் தெரிய வருகின்றது. (எஸ்)

## மீனவர்கள் கைது

(கொழும்பு)

தேவேந்திரமுனையில் இருந்து நேற்று முன்தினம் காலை கடலுக்குச் சென்ற ஐந்து மீனவர்கள் தமிழகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணித்த படகையும் தமிழக அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போது 15 இலங்கை மீனவர்கள் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்களையும், அவர்கள் பயணித்த நான்கு படகுகளையும் விடுவிக்குமாறு கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன இந்திய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## வங்கி முகாமையாளர் வீட்டில் அதிகாலை வேளை கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரசடியில், மக்கள் வங்கி முகாமையாளர் ஒருவரது வீட்டில் தங்கநகைகளும், வீடியோ கமராக்களும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் அதிகாலை வீட்டின் சமையலறைக் கூரைப் பகுதியின் ஊடாக வீட்டுக்குள் நுழைந்துள்ள கொள்ளையர்கள், வீட்டிலிருந்த நகைகள் மற்றும் கமரா உள்ளிட்ட பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கொள்ளைச் சம்பவத்தின் போது, 4 வீடியோ கமராக்களும், 50 பவுண் நகைகளும் காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வாகனச் சாரதியிடம் இலஞ்சம் இரண்டு பொலிஸார் சிக்கினர்

(கல்முனை)

கல்முனைப் பிரதேசத்தில் கனரக வாகன சாரதியிடம் 200 ரூபாவினை இலஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டில் கல்முனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரு பொலிஸாரை நேற்றுக் காலை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி இருவரும் கல்முனை தாளைவெட்டுவான் சந்தியில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் மண் ஏற்றி வந்த கனரக வாகனத்தை இடைமறித்து 200 ரூபாய் பணத்தைப் பெற்றுள்ளனர்.

வாகனத்தில் பயணித்த நபர் தனது பெயரை குறித்த பணத்தில் கையொப்பமாக இட்டு வழங்கியதுடன் இச்சம்பவம் குறித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து பொலிஸார் மேற்படி இருவரையும் கைது செய்துள்ளதுடன் இலஞ்சமாக வாங்கிய பணத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

## ஜெனிவா பிரேரணைக்கு எதிரா[illegible] யாழ். நகரில் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றைய தினம் யாழ்.நகரில் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் தலைமை யில் இவ் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகிய இவ் ஆர்ப்பாட்டப் பேரணி யாழ். பஸ் நிலையத்திற்கு அருகில் நிறைவடைந்தது.

இலங்கையில் ஒற்றுமை உள்ளது, சமாதானம் உள்ளது, ஐக்கியம் உள்ளது எதற்காக ஜெனிவா பிரேரணை, எமது நாட்டிற்கு வெளிநாட்டு சூழ்ச்சிகள் வேண்டாம், வெளிநாட்டு தலையீட்டினை நிறுத்து போன்ற கோஷங்களை தாங்கிய சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தும் பொதுமக்கள், [illegible] தலைவர்கள் எனப் பல[illegible] கலந்துகொண்டனர். (எஸ்)




சூரியஒளியிலிருந்து இலவசமாக வீட்டிற்கு**solar** மூலம் மின்சாரத்தினை பெற்று இதிலிருந்து





Radio,Computer,Dish antenna, CFL bulb,T.V பயன்படுத்தலாம்.
விலை 30,000/= ---75,000/= வரை
(வங்கி முலம் மாதாந்தம் செலுத்தலாம்)



எரிபொருள்(டீசல் மண்ணெண்ணை)செலவில்லாமல் நீரைப் பெற்றுக்கெள்ள வேண்டுமா?



முந்திரிகை தென்னை மரக்கறி பயிர்ச் செய்கையாளர்கள்.
விலை 215,000/= முதல்.......
(வங்கிமூலம் மாதாந்தம் செலுத்தலாம்)
விபரங்களிற்கு
NEW ASIAN CENTER
T.P:-0778 249 949
0718 561 654
56/15 ஸ்ரான்லி வீதி
சம்பத் வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்
(C/1332)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.